SIVARAJAVEL IAS ACADEMY
AN IDEAL INSTITUTE FOR CIVIL SERVICE EXAMS

# சங்கமம்

TNPSC க்கான மாதாந்திர நடப்பு நிகழ்வுகள்

ஜூலை - 2023

## சர்வதேச புலிகள் தினம்



# SIVARAJAVEL IAS ACADEMY

FOUNDER - DIRECTOR OF **SMART LEADERS IAS**

TNPSC மற்றும் அனைத்துவிதமான அரசு போட்டித் தேர்விற்கு பயிற்சி பெறும் மாணவர்கள் பயன்படும் வகையில் சிறந்த ஆசிரியர்களை கொண்டு மாதம் தோறும் நடப்பு நிகழ்வுகள் எங்கள் Sivarajavel IAS Academy சார்பாக இலவசமாக வெளியிடப்படுகின்றது. இதனை இலவசமாக பதிவிறக்கம் செய்வதற்கு கீழ்க்கண்ட இணைய முகவரியில் இணையவும்

**Website: www.sivarajavelias.com**
**Facebook : https://www.facebook.com/Sivarajaveliasacademy**
**Instagram: https://www.instagram.com/sivarajavel_ias_academy**
**Telegram: https://t.me/sivarajavel_ias_academy**
**Twitter : https://twitter.com/sivarajavel_ias**

**Kindly share your feedback**
sivarajaveliasacademy@gmail.com

## HEAD OFFICE

No.97, AF Block, Shanthi Colony,
12th Main Road, Anna Nagar
West, Chennai – 600 040.
Ph: 9626364444, 9626369899

## BRANCHES

**TIRUNELVELI**

No.106B, 3rd Floor, Gilgal Complex,
VOC ground Opposite,
Trivandrum Road,
Palayamkottai – 627 002
Ph: 9626252500, 9626253300

**TRICHY**

No.143, 4th Floor,
Lakshmi Complex,
Salai Road,
Thillai Nagar, Trichy-620 018
Ph: 9751500300, 9786500300

# பொருளடக்கம்


| வ.எண் | பொருளடக்கம் | ப.எண் |
|---|---|---|
| 1. | தமிழ்நாடு செய்திகள் | 4 |
| 2. | தேசியச் செய்திகள் | 7 |
| 3. | சர்வதேச செய்திகள் | 11 |
| 4. | பொருளாதாரச் செய்திகள் | 15 |
| 5. | திட்டங்கள் | 16 |
| 6. | சுற்றுச்சூழல் செய்திகள் | 18 |
| 7. | இராணுவச் செய்திகள் | 19 |
| 8. | அறிவியல் / தொழில்நுட்பம் | 20 |
| 9. | விளையாட்டுச் செய்திகள் | 21 |
| 10. | விருதுகள் | 26 |
| 11. | அறிக்கைகள் | 29 |
| 12. | முக்கிய தினங்கள் | 31 |
| 13. | நியமனம் | 35 |
| 14. | முக்கிய நபர்கள் | 37 |
| 15. | புத்தகங்கள் | 38 |
| 16. | TNPSC துணுக்குகள் | 39 |
| 17. | 2023 ஜூலை மாத வினா விடைகள் | 41 |
| | | |
| | | |

# தமிழ்நாடு செய்திகள்

## 2023 நிதியாண்டில் மின்னணு பொருட்கள் ஏற்றுமதியில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது.

- 2023 ஆம் ஆண்டுக்கான இந்திய அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட ஏற்றுமதித் தரவுகளின்படி, தமிழ்நாடு (TN) இந்த ஆண்டிற்க்கான இந்தியாவின் முன்னணி மின்னணுப் பொருட்களின் ஏற்றுமதி பட்டியலில் முதலிடத்தைப் பெற்றுள்ளது.
- அதாவது கிட்டத்தட்ட ஏற்றுமதியானது USD 5.37 பில்லியன் மதிப்பில் முதலிடத்திலும், USD 4.90 பில்லியன் மதிப்பிலான ஏற்றுமதியுடன் 2வது இடத்தில் உள்ள உத்தரப் பிரதேசமும், USD 4.52 பில்லியன் உடன் கர்நாடகா 3வது இடத்திலும் உள்ளது.

## வெம்பக்கோட்டை அகழாய்வில் "கூம்பு வடிவ விளக்கு" உட்பட பல்வேறு பழங்காலப் பொருள்கள் கண்டெடுப்பு.



- விருதுநகர் மாவட்டத்தில் உள்ள வெம்பக்கோட்டை அருகேயுள்ள விஜயகரிசல்குளம் ஊராட்சிக்குள்பட்ட உச்சிமேடு என்ற பகுதியில் இரண்டாம் கட்ட அகழாய்வுப் பணிகள் கடந்த ஏப்ரல் 6-ஆம் தேதி முதல் நடைபெற்று வருகின்றன. இந்த அகழாய்வில் இதுவரை கிட்டத்தட்ட 2 ஆயிரத்துக்கும் அதிகமான பழைமையானப் பொருள்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.
- இந்த நிலையில், வட்ட வடிவ அகல் விளக்கு, சுடுமண் பானை, அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய கூம்பு வடிவ விளக்கு ஆகியவை கண்டெடுக்கப்பட்டுள்ளன. இந்த கண்டுப்பிடிப்பின் மூலம் நமது முன்னோர்கள் மண்பாண்டக் கூடம் அமைத்து கலைநயம் மிக்க பொருள்களைத் தயாரித்திருக்கலாம் எனத் தொல்லியல் துறையினர் தெரிவித்துள்ளனர்.

## சிவகங்கை அருகே மிகப்பழைமையான "அரிகண்டம் சிலை" கண்டெடுப்பு.



- சிவகங்கை அருகே நடத்திய அகழாய்வில் கிட்டத்தட்ட ஆயிரம் ஆண்டுகள் பழைமையான அரிகண்டம் சிலையானது தொல்லியலாளர்களால் கண்டெடுக்கப்பட்டுள்ளது.
- இந்த சிலையானது சோழபுரத்திலிருந்து நாலுகோட்டைக்குச் செல்லும் வழியில் உள்ள எல்லைப் பிடாரி அம்மன் கோயிலில் கண்டெடுக்கப்பட்டுள்ளது என அகழ்வாராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். மேலும் இந்த சிலையானது கி.பி. 11-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்கலாம் என்றும் இந்தச் சிலைக்கு அருகில் நடுகல் சிலை ஒன்றும் காணப்படுகிறது என்றும் அதில் மூன்று வீரர்கள் வரிசையாக நின்ற கோலத்தில் உள்ளனர் என்றும் அகழ்வாராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## 11 வது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு சென்னையில் நடைபெற்றது



- உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் (ஐஏடிஆர்) மற்றும் சென்னை ஆசியவியல் நிறுவனம் இணைந்து நடத்தும் 11-ஆவது உலகத் தமிழ்

ஆராய்ச்சி மாநாடானது சென்னையில் நடைபெற்றது. இந்த மாநாட்டை முன்னாள் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தொடங்கி வைத்தார்

- தமிழ்மொழி, தமிழ் கலாச்சாரம், இலக்கியம், தமிழர் பண்பாடு, நாகரிகம் ஆகியவை குறித்து இளைஞர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதை முக்கிய நோக்கமாக கொண்டு இந்த மாநாடானது நடைபெற்றுள்ளது.
- மேலும் இந்த மாநாட்டில் அமெரிக்கா, ஜப்பான், சிங்கப்பூர், மலேசியா, உள்ளிட்ட 20 நாடுகளைச் சேர்ந்த தமிழறிஞர்கள் பங்கேற்பார்கள் என உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத் தலைவர் தெரிவித்துள்ளார்.

## தாமிரபரணி ஆற்றங்கரையில் நடைபெற்றுவரும் அகழ்வாய்வு பணிகளில் "தமிழி எழுத்துகள்" பொறிக்கப்பட்ட பானை ஓடுகள் கண்டுபிடிப்பு.

- திருநெல்வேலி மாவட்டத்தின் துலுக்கர்பட்டி அருகே நம்பியாற்று படுகையில் வாழ்வியல் மேடு காணப்படுகிறது இதில் நடத்தப்பட்ட அகழாய்வில் தமிழி எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ள பானை ஓடுகளானது கண்டெடுக்கப்பட்டுள்ளது.
- தற்போது கிடைத்துள்ள பானை ஓடுகளில் 'திஈய', 'திச', 'குவிர(ன்)' ஆகிய தமிழி எழுத்துப்பொறிப்புகள் காணப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.
- தமிழகத்தில் உள்ள குடும்பத் தலைவிகளுக்கு மாதம் 1000 ரூபாயானது உரிமைத் தொகையாக வழங்கும் திட்டமானது செப்டம்பர் மாதம் முதல் தொடங்கப்படும் என மாநில பட்ஜெட் கூட்டத் தொடரில் அறிவிக்கப்பட்டுள்ளது.
- இந்த திட்டத்திற்கு "கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம்" என்று பெயரிடப்பட்டுள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது. அதன்படி "செப்டம்பர் 15-ம் தேதி" முதல் இந்த திட்டமானது தொடங்கப்படும் என தமிழக அரசு அறிவித்துள்ளது.

## தமிழக அரசு மற்றும் புகழ்பெற்ற மென்பொருள் நிறுவனமான மைக்ரோசாப்ட் இடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தமானது(MoU) மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- சிற்றூர் மற்றும் கிராமப்புற மாணவர்கள் சமீபத்திய தொழில்நுட்பங்கள் மற்றும் கருவிகளைக் கற்கும் வாய்ப்பை வழங்குதல், தொழில்நுட்பக் கல்வி மற்றும் கற்றல் ஆதரவு (TEALS) திட்டத்தைச் செயல்படுத்துதல் ஆகியவற்றை நோக்கமாக கொண்டு தமிழக கல்வி துறை மற்றும் புகழ்பெற்ற மென்பொருள் நிறுவனமான மைக்ரோசாப்ட் இடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தமானது(MoU) மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- இந்த ஒப்பந்தமானது மாநில பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது மற்றும் இது அரசு பள்ளி மாணவர்களிடையே STEM (அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம்) கல்வியை மேம்படுத்துவதற்கான மாநில அரசின் முயற்சியின் முக்கியமான ஒரு பகுதியாக அமைந்துள்ளது என பள்ளி கல்வி துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## தமிழகத்தின் முதல் விமானப் பயிற்சி மையத்தை அமைக்க DGCA ஒப்புதல் அளித்துள்ளது.

- சேலம் விமான நிலையத்தில் செயல்படும் EKVI விமானப் பயிற்சி அமைப்பிற்கு சிவில் விமானப் போக்குவரத்து இயக்குநரகமானது(DGCA) தமிழகத்தில் ஒரு சிறப்பு விமானப் பயிற்சி மையத்தை அமைப்பதற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்த ஒப்புதலின் மூலம் இந்த மையமானது இந்தியாவில் 36 ஆவது DGCA ஆல் அங்கீகரிக்கப்பட்ட பறக்கும் பயிற்சி மையம் மற்றும் தமிழகத்தின் முதல் பறக்கும் பயிற்சி மையம்(FTO) என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## திருக்கோளூர் அகழாய்வில் கிட்டத்தட்ட 324 தொல் பொருட்களானது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.




- தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள ஆதிச்சநல்லூர் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் மூதாதையோர் அல்லது முதுமக்கள் வாழ்ந்ததற்கான அடையாளங்கள் உள்ளதால் அகழாய்வு பணிகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் தற்போது வரை இடைக்கால நாணயங்கள், வெண்கல மோதிரம், வெண்கல வளையல், கண்ணாடி மணிகள், சுடுமண் சிலைகள், சுடுமண் மணிகள், கண்ணாடி

வளையல் துண்டுகள், சீனப் பானை ஓடுகள் என கிட்டத்தட்ட 324 தொல்பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

- மேலும் கடந்த 2020 ஆம் ஆண்டு நடந்த மத்திய பட்ஜெட் கூட்டத்தொடரில் ஆதிச்சநல்லூரில் கண்டுபிடிக்கப்பட்ட பொருட்களுக்காக உலகத்தரம் வாய்ந்த அருங்காட்சியகம் அமைக்கப்படும் என்று மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## தமிழ்நாடு தினம்

- இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு 'மெட்ராஸ் பிரசிடென்ஸி' மெட்ராஸ் மாகாணமாக மாறியது. பின்பு 1956 நவம்பர் 1-ம் தேதி "மதராஸ் மாநிலம்" ஆனது உருவானது. இறுதியாக 1967 ஜூலை 18-ஆம் நாள் மதராஸ் மாநிலம், அதிகாரப்பூர்வமாக 'தமிழ்நாடு' என்று பெயர் பெற்றது. இதை சிறப்பிக்கும் வகையில் தமிழக அரசானது ஒவ்வொரு ஆண்டும் "தமிழ்நாடு தினம்" ஆனது கடைப்பிடிக்கப்படுகிறது.



- இந்த தினமானது 2021 அக்டோபர் 9-ம் தேதி சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்டது. மேலும் மெட்ராஸ் மாகாணம் என்று இருந்ததை பேரறிஞர் அண்ணா 1967 ஜூலை 18-ம் தேதி சட்டப்பேரவையில் "தமிழ்நாடு" என மாற்றி தீர்மானம் நிறைவேற்றினார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலினுக்கு 'சிறந்த மனிதருக்கான விருதானது' வழங்கப்பட்டது

- சர்வதேச செஸ் ஒலிம்பியாட் போட்டியை வெற்றிகரமாக தமிழக தலைநகரமான சென்னையில் நடத்தியதை பாராட்டும் வகையில், ஆசிய செஸ் கூட்டமைப்பானது தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலினுக்கு "சிறந்த மனிதருக்கான" விருதை வழங்கப்பட்டது
- இந்த சர்வதேச செஸ் ஒலிம்பியாட் போட்டியானது 1927-ஆம் ஆண்டு முதல் 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை என்ற வீதத்தில் நடத்தப்பட்டு வருகிறது. இந்த நிலையில், 44-வது சர்வதேச செஸ் ஒலிம்பியாட் போட்டித்தொடரானது இந்தியாவில் முதல் முறையாக நடத்தப்பட்டது. இந்தப் போட்டியை தமிழ்நாடு நடத்தியது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## மிகப்பெரிய கலைஞர் நூற்றாண்டு நூலகமானது மதுரையில் திறக்கப்பட்டுள்ளது.

- தமிழக அரசு சார்பில் மதுரையில் புதுநத்தம் சாலையில் பொதுப்பணித்துறைக்குச் சொந்தமான 2.61 ஏக்கர் நிலத்தில், 2,22,815 சதுர அடி பரப்பளவில் அதிநவீன வசதிகளுடன் மாணவர்களின் நலனுக்காக பிரமாண்டமாக 'கலைஞர் நூற்றாண்டு நூலகம்' ஆனது திறக்கப்பட்டுள்ளது.

## தேசிய செல் இரத்த சோகை ஒழிப்பு திட்டம் அறிமுகம்.

- தேசிய அரிவாள் செல் இரத்த சோகை(Sickle Cell Anaemia) ஒழிப்பு திட்டத்தை பிரதமர் மோடி மத்திய பிரதேசத்தில் தொடங்கி வைத்தார்
- இது அரிவாள் உயிரணு(Sickle Cell) நோயால், குறிப்பாக பழங்குடியின மக்கள் மற்றும் மலையோர வசிப்பவர்களிடையே ஏற்படும் அழுத்தமான சுகாதார சவால்களை நிவர்த்தி செய்வதே இந்த திட்டத்தின் நோக்கமாகும்.
- மேலும் 2047 ஆம் ஆண்டுக்குள் இந்த நோயினை நாட்டின் பொது சுகாதாரப் பிரச்சனையிலிருந்து அகற்றுவதற்கான அரசாங்கத்தின் தொடர்ச்சியான முயற்சிகளில் இந்த திட்டம் ஒன்றாக பார்க்கப்படுகிறது.

## நீர்மூழ்கிக் கப்பலின் மேம்பாட்டுக்காக கப்பல் கட்டும் நிறுவனமான மசகான் டாக் உடன் MoD ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.



- கடல்பரப்பின் கீழிருந்து தங்கி அளிக்கும்(SSK) வகை நீர்மூழ்கிக் கப்பலான "INS ஷங்குஷ்" இன் ஆயுள் சான்றிதழுடன் (MRLC) அதனை மேம்படுத்துவதற்கான ஒப்பந்தத்தில் பாதுகாப்பு அமைச்சகமானது மசகான் டாக் கப்பல் கட்டும் நிறுவனத்துடன் மும்பையில் ஒரு ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளது.
- இது ரூ. 2725 கோடி மதிப்பிலான ஒரு கூட்டு ஒப்பந்தமாகும். இது ஐஎன்எஸ் ஷங்குஷ் போர் கப்பலை 2026-க்குள் மேம்படுத்தப்பட்ட போர்த் திறனுடன் இந்தியக் கடற்படையின் செயலில் சேர்ப்பதை நோக்கமாக கொண்டு இந்த ஒப்பந்தமானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## இந்தியாவுடனான புதுப்பிக்கப்பட்ட விமான ஆராய்ச்சி மற்றும் சேவைகள் ஒப்பந்தத்தை பிலிப்பைன்ஸ் அரசாங்கமானது அங்கீகரித்துள்ளது.

- பிலிப்பைன்ஸின் வெளியுறவுச் செயலர் என்ரிக் ஏ. மனலோ மற்றும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர். எஸ். ஜெய்சங்கர் ஆகியோர் புதுதில்லியில் இருதரப்பு ஒத்துழைப்புக்கான 5வது இந்தியா-பிலிப்பைன்ஸ் கூட்டுக் குழு கூட்டத்தில் பங்கேற்றுள்ளனர்.
- இந்த நிகழ்வின்போது, எல்லை பாதுகாப்பு, கடல்சார் பாதுகாப்பு, வான்சார் பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் நாடு கடந்த குற்றங்கள் உள்ளிட்ட பல விஷயங்களில் இருதலைவர்களும் இணைந்து செயல்பட ஒப்புக்கொண்டனர். மேலும் இந்த கூட்டத்தில் இந்தியாவுடனான புதுப்பிக்கப்பட்ட விமான ஆராய்ச்சி மற்றும் சேவை ஒப்பந்தத்திற்கு பிலிப்பைன்ஸ் ஒப்புதல் அளித்துள்ளதாக வெளியுறவுத்துறை செயலாளர் அறிவித்தார்.
- இந்தியாவின் குறைந்த கார்பன் ஆற்றல் துறையை மேம்படுத்துவதற்காக 1.5 பில்லியன் டாலர் கடனுக்கு உலக வங்கியானது ஒப்புதல் அளித்துள்ளது.

## இந்தியாவின் குறைந்த கார்பன் ஆற்றல் துறையின் வளர்ச்சியை விரைவுபடுத்துதல் மற்றும் மேம்படுத்தலுக்காக 1.5 பில்லியன் டாலர் கடன் நிதியுதவிக்கு உலக வங்கியானது (WB) ஒப்புதல் அளித்துள்ளது.

- 2030 ஆம் ஆண்டிற்குள் தனியார் துறை முதலீட்டில் 100 பில்லியன் டாலர்களை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்ட நாட்டின் "தேசிய பசுமை ஹைட்ரஜன் திட்டத்தினை வெற்றிகரமாக செயல்படுத்தப்படுவதற்கு இந்தத் நிதியுதவியானது உதவும் என உலக வங்கி தனது அறிவிப்பில் தெரிவித்துள்ளது.

## இணையத்தினை மேம்படுத்த "தகவல் பாதுகாப்பு நடைமுறைகள் பற்றிய வழிகாட்டுதல்களை" CERT வெளியிட்டுள்ளது.

- 80 கோடிக்கும் அதிகமான இந்தியர்கள் இணையம் மற்றும் சைபர்ஸ்பேஸை தீவிரமாகப் பயன்படுத்துவதால், இந்தியாவின் கணினி அவசரநிலைப் பதிலளிப்புக் குழு (CERT-In) வணிகம், கல்வி, நிதி மற்றும் டிஜிட்டல் அரசாங்க சேவைகளுக்கான அணுகல் ஆகியவற்றிற்கான வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது.
- பாதுகாப்பான சைபர்ஸ்பேஸின் இலக்கை மேலும் வலுப்படுத்தி அதில் உள்ள சிக்கல்களை நிவர்த்தி செய்யும் என மத்திய தகவல் தொழில் நுட்ப அமைச்சகமானது தெரிவித்துள்ளது.

அனைத்து அரசு நிறுவனங்கள், பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் பிற அரசு சாரா நிறுவனங்களையும் அவற்றின் நிர்வாக எல்லையையும் இந்த முன்னெடுப்பின் கீழ் கொண்டு வருகிறது.

## ஸ்டார்ட் அப் 20 ஷிகர் உச்சி மாநாடு



- இந்தியாவின் ஜி20 தலைமையின் கீழ், ஸ்டார்ட் அப் 20 ஷிகர் உச்சி மாநாடானது ஹரியானா மாநிலத்தின் குருகிராமில் தொடங்கப்பட்டது. இது இரண்டு நாள் மாநாடாகும்.
- இந்த மாநாடானது ஸ்டார்ட்-அப்களில் உள்ள நிறை குறைகளை எவ்வாறு நிவர்த்தி செய்வது என்பதை தலைப்பாக கொண்டு நடைபெறுகிறது மேலும் இந்த உச்சிமாநாட்டின் போது, ஸ்டார்ட்அப்20 அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இதில் G20 நாட்டு தலைவர்களை 2030ஆம் ஆண்டுக்குள் உலகளாவிய தொடக்க சுற்றுச்சூழல் அமைப்பில் ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர்களுக்கான உலக கூட்டு முதலீட்டை உயர்த்த வலியுறுத்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## 23வது SCO உச்சி மாநாடு

- பிராந்திய மற்றும் உலக பாதுகாப்பு மற்றும் அமைதிக்கு பயங்கரவாதம் அச்சுறுத்தலாக இருப்பதாகவும், ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின்(SCO) உறுப்பு நாடுகள் இந்த அச்சுறுத்தலை ஒன்றாக எதிர்த்துப் போராட வேண்டும் என்றும் இந்திய பிரதமர் தெரிவித்தார்
- இந்த 23வது SCO உச்சி மாநாட்டில் ஈரான், மங்கோலியா மற்றும் பெலாரஸ் ஆகியவை சிறப்பு பார்வையாளர் நாடுகளாக அழைக்கப்பட்டுள்ளன. மேலும் SCO பாரம்பரியத்தின்படி, துர்க்மெனிஸ்தானும் தலைமை விருந்தினராக அழைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## 3வது ஜி20 கலாச்சார பணிக்குழு கூட்டமானது ஹம்பியில் நடைபெற்றது

- மூன்றாவது G20 கலாச்சார பணிக்குழு கூட்டமானது, மத்திய பாராளுமன்ற விவகார அமைச்சர் பிரஹலாத் ஜோஷியின் முன்னிலையில் உலக பாரம்பரிய தளமான கர்நாடக மாநிலத்தின் ஹம்பியில் நடைபெற்றது
- இந்திய ஜனாதிபதியின் கீழ் முன்மொழியப்பட்ட நான்கு கருப்பொருள்கள் குறித்து இந்த மாநாட்டில் விவாதிப்பதை நோக்கமாக கொண்டு நடைப்பெற உள்ளது. மேலும் இது இரண்டு நாள் மாநாடாகும்.
- 2023 ஆம் ஆண்டுக்கான "பாரம்பரிய மருத்துவம் குறித்த ஆசியான் நாடுகளின் மாநாட்டை" இந்தியா நடத்த திட்டமிட்டுள்ளது.
- ஆசியான் செயலகம், வெளியுறவு அமைச்சகம் மற்றும் ஆசியானுக்கான இந்திய தூதரகம் ஆகியவற்றின் ஆதரவுடன் மத்திய ஆயுஷ் அமைச்சகமானது "ஆசியான் நாடுகளுக்கான பாரம்பரிய மருந்துகள் குறித்த மாநாட்டை" நடத்தத் திட்டமிட்டுள்ளது என ஆசியான் அமைப்பு தெரிவித்துள்ளது.
- இந்தியா மற்றும் ஆசியான் நாடுகளுக்கு இடையேயான தளத்தை வலுப்படுத்துதல், சிறந்த நடைமுறைகளைப் பகிர்ந்து கொள்ளுதல் மற்றும் பாரம்பரிய மருத்துவத் துறையில் எதிர்கால ஒத்துழைப்புக்கான வரைபடத்தை உருவாக்குதல் ஆகியவற்றை நோக்கமாக் கொண்டு இந்த மாநாடானது நடைப்பெற உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பேங்க் ஆஃப் பரோடா ஆனது "மகிளா சம்மான் சேமிப்புச் சான்றிதழ் (MSSC) திட்டத்தை" அறிமுகப்படுத்தியுள்ளது.

- இந்தியாவின் இரண்டாவது மிகப்பெரிய பொதுத்துறை வங்கியான பேங்க் ஆஃப் பரோடா, "பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கான குறுசிறு சேமிப்பு திட்டமான மகிளா சம்மான் சேமிப்புச் சான்றிதழ்(MSSC) திட்டத்தை" அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்த திட்டமானது பெண்கள் மற்றும் குழந்தைகளின் எதிர்காலத்தை கருதி அவர்களுக்காக மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்களால் 2023-24 நிதியாண்டில் (மத்திய பட்ஜெட்டில்) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். கனரா வங்கி, பாங்க் ஆஃப் இந்தியா மற்றும் தபால் அலுவலகத்திற்குப் பிறகு இந்த வசதியை அறிமுகப்படுத்தும் மூன்றாவது நிதி நிறுவனம் இது என்பது முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

## "பூமி சம்மான் 2023"




- டிஜிட்டல் இந்திய நில ஆவணங்கள் நவீனமயமாக்கல் திட்டத்தின் முக்கிய கூறுகளை நிறைவு செய்வதில் சிறந்து விளங்கிய, ஒன்பது

மாநில செயலாளர்கள் மற்றும் அவர்களுடன் 68 மாவட்ட ஆட்சியர்களுடனான "பூமி சம்மான் 2023 ஆனது இந்திய குடியரசு தலைவர் திரௌபதி முர்மு அவர்களால் புது தில்லியில் தொடங்கப்பட உள்ளது.

- இந்த "பூமி சம்மான்" திட்டமானது நம்பிக்கை மற்றும் கூட்டாண்மை அடிப்படையிலான மத்திய-மாநில கூட்டுறவு கூட்டாட்சிக்கு சிறந்த எடுத்துக்காட்டு என்றும் இந்த திட்டத்தின் மூலம் மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துவதை நோக்கமாக கொண்டு இந்த திட்டமானது மேற்கொள்ளப்பட்டுள்ளது என குடியரசு தலைவர் தெரிவித்துள்ளார்.

## அமெரிக்கா – இந்தியா இடையிலான வியூக சுத்தமான எரிசக்தி கூட்டாண்மை அமைச்சர்கள் மாநாடானது புதுதில்லியில் நடைபெற்றது

- இயற்கை எரிவாயு மற்றும் பெட்ரோலிய அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி மற்றும் அமெரிக்க எரிசக்தி செயலர் ஜெனிபர் கிரான்ஹோம் இடையே அமெரிக்கா – இந்தியா மூலோபாய தூய்மையான எரிசக்தி கூட்டாண்மை (SCEP) தொடர்பான அமைச்சர்கள் மாநாடானது புது தில்லியில் நடைபெற்றது
- இரு நாடுகளுக்கும் இடையிலான ஆரோக்கியமான வளர்ச்சி விகிதங்களை உறுதி செய்யும் அதே வேளையில், மூலோபாய தூய்மையான எரிசக்தி கூட்டாண்மையில் பூஜ்ஜிய கார்பனேற்றம் செய்வதற்கான விரிவான பார்வையை பிரதிநிதித்துவப்படுத்துவதை நோக்கமாக கொண்டு இந்த மாநாடானது நடைபெற்றது

## டாங்காய் முறை

- 2000 ஆண்டுகள் பழமையான கப்பல் கட்டும் தையல் முறை எனப்படும் பழங்கால தொழில்நுட்ப முறை(டாங்காய் முறை)யை புதுப்பிக்கவும் அதனை அழிய விடாமல் பாதுகாப்பதற்காகவும் மத்திய கலாச்சார அமைச்சகமானது இந்திய கடற்படையுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை(MoU) மேற்கொண்டுள்ளது.
- மேலும் இந்தியா ஒரு வலுவான கடல் பாரம்பரியத்தைக் கொண்டுள்ளதென்றும் அதன் வலுவான பயன்பாடு வர்த்தகம், ஆய்வு, கலாச்சார பரிமாற்றம் ஆகியவற்றில் முக்கிய பங்கு வகித்துள்ளது என்றும் இதனை மீட்டுருவாக்குதல் மூலம் நாட்டின் பாரம்பரியமும் பொருளாதாரமும் முன்னேறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## குறைக்கடத்தி விநியோக அமைப்பை உருவாக்க இந்தியா மற்றும் ஜப்பான் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்



- மீள்கடத்தி அல்லது குறைக்கடத்தி விநியோக அமைப்பு சங்கிலியை உருவாக்க ஜப்பான் நாட்டின் அரசாங்கத்துடன் இந்திய அரசாங்கமானது ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- புது தில்லியில் நடைப்பெற்ற இந்த ஒப்பந்த நிகழ்ச்சியில் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ், உபகரணங்கள் ஆராய்ச்சி, உற்பத்தி, குறைக்கடத்தி வடிவமைப்பு, திறன் மேம்பாடு மற்றும் அவற்றின் வழங்கல் சேவை ஆகியவற்றில் இரு நாடுகளின் ஒத்துழைப்பை மேம்படுத்துவதை நோக்கமாக கொண்டு இந்த ஒப்பந்தமானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## பாராளுமன்ற லோக்சபாவில் பல – மாநில கூட்டுறவு சங்கங்கள் (திருத்தம்) மசோதா, 2022 ஆனது நிறைவேற்றப்பட்டுள்ளது.

- பல – மாநில கூட்டுறவு சங்கங்கள் திருத்த மசோதா 2022 ஆனது பாராளுமன்ற லோக்சபாவில் (மக்களவையில்) நிறைவேற்றப்பட்டுள்ளது.
- பல மாநில கூட்டுறவுச் சங்கங்களில் நிர்வாகத்தை வலுப்படுத்துதல், பொறுப்புணர்வை அதிகரித்தல், வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துதல் மற்றும் தேர்தல் செயல்முறைகளை சீர்படுத்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு இந்த மசோதாவானது கொண்டுவரப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.
- **மசோதாவின் முக்கிய அம்சங்கள்**
- இந்த மசோதா பல மாநில கூட்டுறவு சங்கங்கள் சட்டம், 2002 ஐ திருத்துகிறது. இது பல மாநில கூட்டுறவு சங்கங்களின் வாரியங்களுக்கு தேர்தல்களை நடத்துவதற்கும் மேற்பார்வையிடுவதற்கும் கூட்டுறவு தேர்தல் ஆணையத்தை நிறுவுகிறது.
- பல-மாநில கூட்டுறவு சங்கம் தங்கள் பங்குகளை மீட்டெடுப்பதற்கு முன் அரசாங்க அதிகாரிகளின் முன் அனுமதி தேவை.
- நோய்வாய்ப்பட்ட பல மாநில கூட்டுறவு சங்கங்களின் மறுமலர்ச்சிக்காக ஒரு கூட்டுறவு மறுவாழ்வு, புனரமைப்பு மற்றும் மேம்பாட்டு நிதி நிறுவப்படும். லாபம் ஈட்டும் பல மாநில கூட்டுறவு சங்கங்களின் பங்களிப்புகள் இந்த

நிதிக்கு நிதியளிக்கப்படும்.

- அந்தந்த மாநிலச் சட்டங்களுக்கு உட்பட்டது, கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்கனவே உள்ள பல மாநில கூட்டுறவுச் சங்கத்தில் இணைவதற்கு இந்த மசோதா அனுப்பப்பட்டுள்ளது.
- **முக்கிய சிக்கல்கள் மற்றும் பகுப்பாய்வு**
- நோய்வாய்ப்பட்ட பல-மாநில கூட்டுறவு சங்கங்கள், லாபம் ஈட்டும் பல மாநில கூட்டுறவு சங்கங்களின் பங்களிப்புகள் மூலம் நிதியளிக்கப்படும் நிதியால் புதுயிர் பெறும். இது சிறப்பாகச் செயல்படும் சங்கங்களுக்குச் செலவை திறம்படச் சுமத்துகிறது.
- பல மாநில கூட்டுறவு சங்கங்கள் அதன் பங்குகளை மீட்பதைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தை அரசாங்கத்திற்கு வழங்குவது, தன்னாட்சி மற்றும் சுதந்திரம் ஆகிய கூட்டுறவுக் கொள்கைகளுக்கு எதிரானதாக இருக்கலாம்.

## நம்பிக்கையில்லா தீர்மானம்

- மணிப்பூர் மாநிலத்தின் வன்முறை விவகாரம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் NDA கூட்டணி அரசிற்கு எதிராக காங்கிரஸ் கட்சியில்மக்களவையில் நம்பிக்கையில்லா தீர்மானத்தை கொண்டு வந்துள்ளது.
- காங்கிரஸ் கட்சியின் எம்பி கௌரவ் கோகோய் இந்த நம்பிக்கையில்லா தீர்மானத்தை சபையில் முன்வைத்துள்ளார். இதுவரை நாடு சுதந்திரம் அடைந்ததில் இருந்து "27 நம்பிக்கையில்லா தீர்மானங்கள்" நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்திரா காந்தி அதிக எண்ணிக்கையிலான நம்பிக்கையில்லா தீர்மானங்களை எதிர்கொண்டவராவார் — 15 முறை.

## சுரங்கங்கள் மற்றும் கனிமங்களுக்கான மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை திருத்த சட்டம்

- நாடாளுமன்ற மக்களவையில் சுரங்கங்கள் மற்றும் கனிமங்களுக்கான மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை திருத்த சட்ட மசோதா 2023 ஆனது பெரும் அமளிக்கு மத்தியில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த மசோதாவானது சுரங்கத் துறையில் உள்ள சிக்கல்கள் மற்றும் குளறுபடிகளை ஒழுங்குபடுத்தும் வகையில் திருத்துகிறது.
- இந்த மசோதாவானது மத்திய அமைச்சர் பிரகலாத் ஜோஷி(நிலக்கரி மற்றும் சுரங்கத் துறை) அவர்களால் மக்களவையில் முன்வைக்கப்பட்டுள்ளது. இது சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் சட்டம், 1957 ஐ திருத்துகிறது.
- சிவில் 20" உச்சி மாநாடானது இந்திய தலைமையின் கீழ் ஜெய்ப்பூரில் நடைபெற்றது
- ராஜஸ்தான் மாநிலத்தின் தலைநகரமான ஜெய்ப்பூரில் ஜி 20 இன் அதிகாரப்பூர்வ குழுவான "சிவில் 20" உச்சி மாநாடானது ஜெய்ப்பூரில் நடைபெற்றது
- இந்த மூன்று நாட்கள் நடைபெற கூடிய மாநாட்டில் 5 அமர்வுகளின் கீழ் பல்வேறு தலைப்புகளில் விரிவான மற்றும் எதிர்கால நலனுக்கான விவாதங்கள் நடைபெறும் என்றும் அதன் 16 பணிக்குழுக்களால் உருவாக்கப்பட்ட மாதிரி-கொள்கைப் பரிந்துரைகளை மாநாட்டில் முன்வைக்கப்படும் எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பரிவர்த்தனை மேம்பாட்டுக்காக இந்தியாவும் ஐக்கிய அரபு அமீரகமும் இரண்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளன.

- இந்தியாவும் ஐக்கிய அரபு அமீரகமும் எல்லை தாண்டிய பரிவர்த்தனைகளுக்கு தங்களின் உள்ளூர் நாணயங்களைப் பயன்படுத்துவதற்கும், தங்கள் பணம் மற்றும் செய்தி அனுப்பும் முறைகளை மேலும் மேம்படுத்துவதற்கும் வர்த்தக ஒத்துழைப்புக்காகவும் இரண்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளன.
- இரு நாடுகளுக்கிடையேயான அனைத்து நடப்புக் கணக்கு பரிவர்த்தனைகள் மற்றும் அனுமதிக்கப்பட்ட மூலதன கணக்கு பரிவர்த்தனைகளை உள்ளடக்கி எல்லை தாண்டிய பரிவர்த்தனைகளுக்கு உள்ளூர் நாணயங்களைப் பயன்படுத்துவதை நோக்கமாக கொண்டு இந்த ஒப்பந்தமானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# சர்வதேச செய்திகள்

## இங்கிலாந்து பிரதமர் 101 வயதான சீக்கியருக்கு "பாயிண்ட்ஸ் ஆஃப் லைட் விருது" வழங்கி கௌரவித்துள்ளார்.



- 10-டவுனிங் தெருவில் நடந்த இங்கிலாந்து-இந்தியா வார வரவேற்பு நிகழ்ச்சியில், இரண்டாம் உலகப் போரில் முக்கியமான தருணங்களில் பங்கேற்று உயிர்பிழைத்த கடைசி சீக்கிய வீரர்களில் ஒருவரான ரஜிந்தர் சிங் தாத்தை, இங்கிலாந்து பிரதமர் ரிஷி சுனக் "பாயிண்ட்ஸ் ஆஃப் லைட் விருது" வழங்கி கௌரவித்துள்ளார்.
- இவர் இரண்டாம் உலகப் போரின்போது பிரிட்டிஷ் இந்திய இராணுவத்தில் சேர்ந்தார் மற்றும் பல்வேறு முயற்சிகளின் படி, 1943 இல் ஹவில்தார் மேஜராக (சார்ஜென்ட் மேஜர்) பதவி உயர்வு பெற்றார். மேலும் இவர் பதவி வகித்திருந்த காலங்களில் தனது சீரிய முயற்சிக்காகவும் பிரித்தானிய இந்திய போர் வீரர்களை ஒன்றிணைப்பதற்காக "பிரிக்கப்படாத இந்திய படைவீரர்" என்ற சங்கத்தை நடத்தி வரும் அவரது பணிக்காகவும் இவர் இந்த உயரிய விருதுக்கு அங்கீகரிக்கப்பட்டார்.

## பல்பொருள் அங்காடிகளில் பயன்படுத்தப்படும் மெல்லிய நெகிழி பைகளை முதன்முதலில் தடை செய்துள்ளதாக நியூசிலாந்து அறிவித்துள்ளது.

- பல்பொருள் அங்காடிகளில் வாடிக்கையாளர்கள் தங்கள் பழங்கள் மற்றும் காய்கறிகளை மற்ற இதர பொருட்களைச் சேகரிக்கப் பயன்படுத்தப்படும் மெல்லிய நெகிழி(பிளாஸ்டிக்) பைகளைத் தடை செய்துள்ள முதல் நாடு என்ற அந்தஸ்தை நியூசிலாந்து பெற்றுள்ளது.
- புதிய தடை நெகிழி உறிஞ்சுக் குழாய் (Plastic Straws) மற்றும் 2ஆம் கட்ட நெகிழி பொருட்களுக்கும் இது நீட்டிக்கப்படும் என அந்நாட்டு அரசாங்கம் தெரிவித்துள்ளது. மேலும் ஏற்கனவே 2019 இல் தடிமனான நெகிழிகளை அந்த அரசாங்கம் தடை விதித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## விமான இயக்க ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக EU விமானப் பாதுகாப்பு முகமையுடன் DGCA ஆனது ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளது.

- ஆளில்லா விமான அமைப்புகள் மற்றும் விமான இயக்க ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக, சிவில் விமானப் போக்குவரத்து இயக்குநரகமானது (DGCA) ஐரோப்பிய ஒன்றிய விமானப் பாதுகாப்பு நிறுவனத்துடன்(EASA) ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளது.
- இந்திய ஆளில்லா விமானப் போக்குவரத்துத் துறையின் வளர்ச்சியைத் துரிதப்படுத்துதல் மற்றும் தொழில்நுட்ப மேம்பாடுகள் & ஆராய்ச்சிகள் குறித்து இருதரப்பு அதிகாரிகளுக்கும் இடையேயான ஒத்துழைப்பை மேம்படுத்துவதை நோக்கமாக கொண்டு இந்த ஒப்பந்தமானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## குளோபல் க்ரைசிஸ் ரெஸ்பான்ஸ் குழுமத்தின் சாம்பியன்ஸ் குழுவில் இந்தியா இணைகிறது

- ஐ.நா பொதுச்செயலாளரின் அழைப்பின் பேரில் இந்தியா உலகளாவிய நெருக்கடி பதில் குழுவின் (GCRG) சாம்பியன்ஸ் குழுவில் இணைந்துள்ளது . உணவுப் பாதுகாப்பு, எரிசக்தி மற்றும் நிதி ஆகியவற்றில் அவசர உலகளாவிய பிரச்சினைகளைத் தீர்க்கவும், உலகளாவிய பதிலை ஒருங்கிணைக்கவும் மார்ச் 2022 இல் GCRG நிறுவப்பட்டது.
- சாம்பியன்ஸ் குழுவின் கலவை
- சாம்பியன்ஸ் குழுவில் தற்போது பங்களாதேஷ், பார்படாஸ், டென்மார்க், ஜெர்மனி, இந்தோனேசியா மற்றும் செனகல் ஆகிய நாடுகளின் அரசாங்கங்கள்/மாநிலங்களின் தலைவர்கள் உள்ளனர்.
- இந்தக் குழுவில் இந்தியா சேர்க்கப்படுவது, குறிப்பாக வளரும் நாடுகளுக்கு, முடிவு சார்ந்த தீர்வுகளைக் கண்டறிவதில் ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டு முயற்சிகளை வலுப்படுத்தும்.
- GCRGயின் இலக்குகள் மற்றும் கவனம்:
- உணவுப் பாதுகாப்பு, எரிசக்தி மற்றும் நிதி ஆகியவற்றில் ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட நெருக்கடிகளைத் தீர்ப்பதற்காக GCRG நிறுவப்பட்டது.

- உலகளாவிய பதிலை ஒருங்கிணைத்து, இந்த நெருக்கடிகளை திறம்பட சமாளிக்க நாடுகளுக்கு உதவும் உத்திகளை உருவாக்குவதே இதன் முதன்மை நோக்கமாகும்.
- GCRG, உலகம் எதிர்கொள்ளும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட சவால்களை எதிர்கொள்வதில் தீர்வுகளைத் திரட்டி முடிவெடுப்பவர்களுக்கு உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## நேட்டோவில் இணைவதற்கான ஸ்வீடன் அனுமதி ஒப்பந்தத்தை துருக்கி ஏற்றுக் கொள்கிறது.

- வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பபான நேட்டோவில் உறுப்பினராக ஸ்வீடனுக்கு பல மாதங்கள் நீடித்த எதிர்ப்பை துருக்கி நிறுத்தியதால் மூலம் ஸ்வீடன் நாடானது எந்த எதிர்ப்பும் இல்லாமல் அந்த அமைப்பில் சேர உள்ளது.
- ஏற்கனவே 30 நாடுகள் இந்த அமைப்பில் உறுப்பினராக இருந்த நிலையில், 4 ஏப்ரல் 2023 அன்று கூட்டணியில் இணைந்த சமீபத்திய நாடாக ஃபின்லாந்து ஆனது. மேலும் இந்த ஒப்புதல் மூலம் ஸ்வீடன் இணைந்தால் நேட்டோவின் உறுப்பு நாடுகளின் எண்ணிக்கையானது 32 ஆகக்கூடும் என்றும் இது ரஸ்யாவுக்கு மிகப் பெரிய பின்னடைவை ஏற்படுத்தும் என உலக பாதுகாப்பு வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.

## உலகின் முதல் மீத்தேன் திரவ ராக்கெட்டை வெற்றிகரமாக ஏவிய நாடு என்ற அந்தஸ்தை சீனாப் பெற்றுள்ளது.

- சீனாவின் தனியார் விண்வெளி நிறுவனமான லேண்ட்ஸ்பேஸ், உலகின் முதல் மீத்தேன்-திரவ ஆக்சிஜனை பயன்படுத்தி Zhuque-2 கேரியர் என்ற ராக்கெட்டை ஜூலை 12 இல் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியுள்ளது.
- இதன் மூலம் உலகின் முதல் மீத்தேன் திரவ ராக்கெட்டை வெற்றிகரமாக ஏவிய நாடு என்ற அந்தஸ்தை சீனா பெற்றுள்ளது. மேலும் டிசம்பரில் ஏவப்பட்ட தோல்விக்குப் பிறகு லேண்ட்ஸ்பேஸின் இரண்டாவது முயற்சி இது என்பது குறிப்பிடத்தக்கதாகும்

## பரிவர்த்தனை மேம்பாட்டுக்காக இந்தியாவும் ஐக்கிய அரபு அமீரகமும் இரண்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளன.

- இந்தியாவும் ஐக்கிய அரபு அமீரகமும் எல்லை தாண்டிய பரிவர்த்தனைகளுக்கு தங்களின் உள்ளூர் நாணயங்களைப் பயன்படுத்துவதற்கும், தங்கள் பணம் மற்றும் செய்தி அனுப்பும் முறைகளை மேலும் மேம்படுத்துவதற்கும் வர்த்தக ஒத்துழைப்புக்காகவும் இரண்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளன.
- இரு நாடுகளுக்கிடையேயான அனைத்து நடப்புக் கணக்கு பரிவர்த்தனைகள் மற்றும் அனுமதிக்கப்பட்ட மூலதன கணக்கு பரிவர்த்தனைகளை உள்ளடக்கி எல்லை தாண்டிய பரிவர்த்தனைகளுக்கு உள்ளூர் நாணயங்களைப் பயன்படுத்துவதை நோக்கமாக கொண்டு இந்த ஒப்பந்தமானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 125 மில்லியன் ஆண்டுகள் பழமையான டைனோசர் படிமமானது சீனாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

- சீனாவில் உள்ள லியோனிங் மாகாணத்தில் ஓர் அளவு பெரிய பாலூட்டி இனம் மற்றும் டைனோசரின் புதைபடிவ எச்சங்களானது சண்டையிடப்பட்ட நிலையில் புதைப்படிவமாக கண்டெடுக்கப்பட்டுள்ளது.
- இந்த புதைபடிவமானது 125 மில்லியன் ஆண்டுகள் பழமையானது என்றும் இந்த புதைப்படிவமானது "வாழ்நாளில் ஒருமுறை" தான் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்றும் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். ரெபெனோமாமஸ் ரோபஸ்டஸ் எனப்படும் இந்த பாலூட்டியின் எச்சங்கள் மற்றும் சைட்டாகோசரஸ் எனப்படும் ஒரு அரியவகை தாவரங்களை உண்ணும் டைனோசர் ஆகியவற்றை இந்த புதைப்படிவமானது கொண்டுள்ளது.

## இந்தியா மற்றும் வங்கதேசம் புரிந்துணர்வு ஒப்பந்தம்



- டாக்காவில் உள்ள ரயில் பாபன் நகரின் டாக்கா-டோங்கி-ஜாய்டெப்பூர் ரயில் சேவை பாதைக்கு கணினி அடிப்படையிலான இன்டர்லாக் சிக்னலிங் அமைப்பை நிறுவுவதல் மற்றும் ஏற்கனவே உள்ள அமைப்பை மேம்படுத்துதல் ஆகியவற்றிற்காக இந்தியா மற்றும் வங்கதேசம் இடையே ஜூலை 23 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தமானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- வங்கதேச ரயில்வே அமைச்சர் எம்.டி. நூருல் இஸ்லாம் முன்னிலையில் இந்த ஒப்பந்தமானது கையெழுத்தானது. நாட்டின் ரயில்சேவையின் நெரிசலைக் குறைக்கும் என்றும் வங்கதேசத்தின் பரபரப்பான ரயில் பாதைகளில் ஒன்றான டாக்கா-டோங்கி-ஜாய்ட்போர் பகுதியின் செயல்திறனை

மேலும் மேம்படுத்துவதை நோக்கமாக கொண்டு இந்த ஒப்பந்தமானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## வள திறன் மற்றும் சுற்றறிக்கை பொருளாதாரத் தொழில் கூட்டமைப்பு(RECEIC)




- வள திறன் மற்றும் சுற்றறிக்கை பொருளாதார தொழில் கூட்டமைப்பானது(RECEIC), 4வது சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை அமைச்சர்கள் மற்றும் நிலைத்தன்மை செயற்குழு மாநாட்டின் போது தொடங்கப்பட்டது.
- இந்த RECEIC கூட்டமைப்பானது உலகளவில் உறுப்பு நாடுகளின் வள திறன் மற்றும் வட்ட பொருளாதார நடைமுறைகளை வலுப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஒரு தொழில் சார்ந்த முன்னெடுப்பாகும்.

## வான்வெளி வழிகாட்டும் ஏவுகணைகளை அமெரிக்காவும் ஆஸ்திரேலியாவும் இணைந்து உருவாக்க திட்டமிட்டுள்ளது.

- 2025 ஆம் ஆண்டிற்குள் வான்வெளி வழிகாட்டுதல் ராக்கெட் ஏவுகணை அமைப்புகளை ஆஸ்திரேலியாவில் அமெரிக்கா வழிக்காட்டுதல்களுடன் தயாரிக்கப்படும் என அமெரிக்க பாதுகாப்பு செயலாளர் ஆஸ்டின் தெரிவித்துள்ளார்.
- ஆஸ்டின் மற்றும் அமெரிக்க வெளியுறவுத்துறை செயலாளர் ஆண்டனி பிளிங்கன் ஆகியோர் ஆஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்து மாகாணத்தில் தங்கள் ஆஸ்திரேலிய அதிகாரிகளுடன் வருடாந்திர ஆஸ்திரேலியா-அமெரிக்க ராஜதந்திர பேச்சுவார்த்தை(Diplomatic dialogue) கூட்டத்தின் போது இந்த முடிவானது எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## போர்க்கப்பல்களை இந்தியாவிலேயே தயாரிப்பதற்காக இந்தியாவும் பிரான்சும் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளது.

- இந்தியா மற்றும் பிரான்சின் பாதுகாப்பு பொதுத்துறை நிறுவனங்களானது (DPSUs), உலகத்தின் பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்காக முறையே கொல்கத்தா மற்றும் மும்பையில் நீர்மூழ்கிக் கப்பல்கள் மற்றும் போர் கப்பல்கள் மற்றும் அவற்றின் பாகங்களை இரு நாடுகளும் இணைந்து தயாரிப்பதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளன.
- இந்த புரிந்துணர்வு ஒப்பந்தங்களானது பிரதமர் மோடியின் "மேக் இன் இந்தியா" திட்டத்தை மேலும் வலுப்படுத்துவதாக அமைகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மும்பையை தளமாகக் கொண்ட மொசகண்டாக் கப்பல் காட்டும் நிறுவனத்துடன் பிரெஞ்சு கடற்படைக் குழுவுடன் இணைந்து "ஸ்கார்பீன் வகை நீர்மூழ்கிக் கப்பல்களைத்" தயாரிக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## இலகுரகப் போர் விமான எஞ்சினை உருவாக்குவதற்காக, DRDO ஆனது பாரிஸில் ஒரு அலுவலகத்தை அமைக்க இந்தியா திட்டமிட்டுள்ளது

- இந்திய பிரதமர் மோடி மற்றும் பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரான், ஏற்பட்ட சந்திப்புக்குப் பிறகு இந்தியாவும் பிரான்ஸும் இணைந்து இலகுரக போர் விமான இயந்திரத்தை உருவாக்குவதற்காக இந்திய DRDO அமைப்பானது பிரான்ஸின் தலைநகரமான பாரிஸில் ஒரு பிராந்திய அலுவலகத்தை அமைக்க திட்டமிட்டுள்ளது.
- பிரான்ஸ் பாதுகாப்பு துறை சார்ந்த நிறுவனமான Safran மற்றும் இந்தியாவின் DRDO-க்கும் இடையே இந்த முன்னெடுப்பு திட்டத்திற்கான வரைபடம் தயாரிக்கப்படும் என இந்திய பிரதமர் தெரிவித்துள்ளார்.

## நைஜீரியாவில் உணவுப் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த நெருக்கடி கால அவசர நிலையானது அறிவிக்கப்பட்டுள்ளது.

- நைஜீரியாவில் ஏற்பட்டுள்ள பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காக, அந்நாட்டு அதிபர் போலா டினுபு நெருக்கடி கால அவசர நிலையை அறிவித்துள்ளார்.
- விவசாயத்தை மேம்படுத்துதல், உணவுச் செலவைக் குறைத்தல் மற்றும் வேலை வாய்ப்புகளை உருவாக்குதல் ஆகிய முக்கிய இலக்குகளை கொண்ட தீர்மானத்தை ஜனாதிபதி டினுபு அந்நாட்டு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியுள்ளார். இந்த ஆண்டு(2023 இல்) கிட்டத்தட்ட 25 மில்லியன் நைஜீரியர்கள் உணவுப் பாதுகாப்பின்மையால் அதிக ஆபத்தில் உள்ளனர் என்று ஐநாவின் ஜனவரி மாத அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஐஐடி-டெல்லி ஆனது UAE இல் தனது புதிய வளாகத்தை அமைக்க திட்டமிட்டுள்ளது.

- இந்திய தொழில்நுட்ப நிறுவனம், டெல்லி கிளையானது தனது "முதல் உலகளாவிய பிராந்திய வளாகத்தை" UAE இன் அபுதாபியில் அமைப்பதற்காக ஒரு புரிந்துணர்வு

ஒப்பந்தத்தைப் பிரதமர் மோடி முன்னிலையில் இரு நாடுகளும் மேற்கொண்டுள்ளது.

- இந்த ஒப்பந்தம் மூலம் இந்திய தொழில் நுட்ப திறனானது உலகளவில் முன்னோக்கிய பார்வைக்கு கொண்டு செல்லும் என இந்தியப் பிரதமர் குறிப்பிட்டுள்ளார். மேலும் முதுகலை பட்டப் படிப்புகளானது(PG) அடுத்த ஆண்டு ஜனவரியில் இருந்தும், இளங்கலை(UG) பட்டப்படிப்புகள் செப்டம்பர் 2024 முதல் தொடங்கும் என குறிப்பிட்டுள்ளது.

SIVARAJAVEL IAS ACADEMY

# பொருளாதாரச் செய்திகள்

## பிரேசிலின் மிகப்பெரிய ஸ்டார்ட்அப் பிஸ்மோ நிறுவனம் மற்றும் விசா இடையே ஒரு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- அமெரிக்க கிரெடிட் கார்டு நிறுவனமான விசா ஆனது பிரேசிலின் புகழ்பெற்ற ஃபின்டெக் ஸ்டார்ட்அப் பிஸ்மோ நிறுவனத்தை $1 பில்லியன் (₹8,204 கோடிக்கு மேல்) மதிப்பீட்டளவில் வாங்குவதற்கான ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- இந்த ஒப்பந்தத்தின் மூலம் விசா நிறுவனத்தின் மதிப்பு மேலும் வளர்ப்படும் என்றும், இந்த முடிவானது பல்வேறு பிரச்சினைகளின் தீர்வாக அமைவதையும் நோக்கமாக கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகும்.
- மேலும் இது ஐரோப்பிய திறந்த வங்கித் தளமான Tink மற்றும் இங்கிலாந்தின் வணிக கடன் வழங்குநரான கரன்சிக்லவ்டு ஆகியவற்றை வாங்கிய 2021க்குப் பிறகு, விசாவின் முதல் மிகப்பெரிய கையகப்படுத்தல் என பொருளாதார வல்லுநர் தெரிவித்துள்ளனர்.

## இந்தியா உலகின் இரண்டாவது பெரிய பொருளாதாரமாக மாறும் – கோல்ட்மேன் சாக்ஸ் அறிக்கை.

- 2075 ஆம் ஆண்டிற்குள் இந்தியாவின் பொருளாதாரமானது ஜப்பான் மற்றும் ஜெர்மனியை மட்டுமல்ல, அமெரிக்காவையும் தாண்டி முன் சென்று உலகின் இரண்டாவது பெரிய பொருளாதாரமாக மாறும் என்று ஒரு அமெரிக்க பன்னாட்டு முதலீட்டு வங்கி மற்றும் நிதி சேவை நிறுவனமான கோல்ட்மேன் சாக்ஸ் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.
- தற்போது, இந்தியாவின் பொருளாதார அடிப்படையில் ஜெர்மனி, ஜப்பான், சீனா மற்றும் அமெரிக்காவைத் தொடர்ந்து உலகின் ஐந்தாவது பெரிய பொருளாதாரமாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் புதுமை மற்றும் தொழில்நுட்பத்தில் ஒரு இந்தியாவானது தொடர்ந்து முன்னேற்றம், அதிக மூலதன முதலீடு மற்றும் அதிகரித்து வரும் தொழிலாளர் & உற்பத்தித்திறன் ஆகிய காரணிகளை அடிப்படியாக கொண்டு இந்த ஆய்வறிக்கையானது தயாரிக்கப்பட்டுள்ளது என அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

## இந்தியா மற்றும் வங்கதேசம் இடையிலான இருதரப்பு வர்த்தகமானது "ரூபாயில்" நடைபெற உள்ளதாக அறிவிப்பு




- வங்கதேசத்தின் தலைநகரமான டாக்காவில், வங்கதேசம் வங்கி மற்றும் இந்திய உயர் ஆணையம் இணைந்து ஏற்பாடு செய்த வணிக ரீதியிலான பன்னாட்டு நிகழ்வில் இந்தியா மற்றும் வங்கதேசம் இடையிலான இருதரப்பு வர்த்தகமானது ரூபாயில் நடைப்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.
- வங்கதேசமானது தெற்காசியாவில் இந்தியாவின் மிகப்பெரிய வர்த்தக நண்பனாக உள்ளது என்றும் இந்த முடிவின் மூலம் இந்த இருதரப்பு உறவானது மேலும் புதிய உச்சத்தை எட்டும் என எதிர்பார்க்கப்படுவதாக வங்கதேச மத்திய வங்கியின் கவர்னர் ஜெனரல் அப்துர் ரூஃப் தாலுக்தார் குறிப்பிட்டுள்ளார்.

## இந்த நிதியாண்டிற்கான இந்தியாவின் வளர்ச்சியானது 6.1% ஆக உயரும் – IMF சமீபத்திய ஆய்வறிக்கை.

- சர்வதேச நாணய நிதியமானது(IMF) நடப்பு நிதியாண்டில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி பொருளாதார வளர்ச்சியை முன்னறிவிப்பிலிருந்து உயர்த்தி 6.1% ஆக இருக்கும் என தனது சமீபத்திய ஆய்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.
- IMF ஆனது ஏப்ரல் மாதம் வெளியிடப்பட்ட ஆய்வறிக்கையில் நடப்பு நிதியாண்டில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது 5.9 சதவீதமாக இருக்கும் என்று குறிப்பிட்டிருப்பது முக்கியம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது. "வேகமாக வளரும் பொருளாதாரம்" என்ற பிரிவில் இந்தியா தனது இடத்தை தொடர்ந்து தக்க வைத்துக் கொள்கிறது என்று அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## திட்டங்கள்

### eSARAS

- செய்தி- பெண்களால் தயாரிக்கப்பட்ட பொருட்களைச் சந்தைப்படுத்த மொபைல் செயலியை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- சுயஉதவி குழுக்களின் (SHGs) பெண்களால் தயாரிக்கப்பட்ட பொருட்களுக்கான சந்தைப்படுத்தல் ஆதரவை வலுப்படுத்துவதற்காக தீன்தயாள் அந்த்யோதயா யோஜனா- தேசிய கிராமப்புற வாழ்வாதார இயக்கம் (DAY-NRLM) ஆகியவை "eSARAS" என்ற மொபைல் செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது.
- eSARAS என்ற இணையத்தளம் மற்றும் eSARAS மொபைல் செயலி மூலம் இணையதள ஆர்டரை வாடிக்கையாளரின் வீட்டு வாசலில் கொண்டு வர தேவையான தளவாடங்களை இது உருவாக்கி, கையாளும் நோக்கத்துடன் இந்த செயலியானது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

### கடல்சார் துறையை வலுப்படுத்த 'SAGAR SAMPARK' என்ற உலகளாவிய வழிசெலுத்தல் செயற்கைக்கோள் அமைப்பானது திறக்கப்பட்டுள்ளது.

- துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சகமானது புத்தாக்கம், சிறந்த உள்கட்டமைப்பை உருவாக்குதல் மற்றும் இந்திய கடல்சார் துறையை(கடற்படையை) வலுப்படுத்துவதற்காக உள்நாட்டு — வேறுபட்ட உலகளாவிய ஊடுருவல் செயற்கைக்கோள் அமைப்பை (DGNSS) 'SAGAR SAMPARK' திறந்து வைத்துள்ளது.
- இந்த அமைப்பானது ஸ்ரீ சர்பானந்தா சோனோவால் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இது "குளோபல் நேவிகேஷன் செயற்கை கோளில்" உள்ள பழுதுபட்ட அமைப்பில்(ஜிஎன்எஸ்எஸ்) பிழைகள் மற்றும் தவறுகள் ஏற்படும் பட்சத்தில் அதனை சரிசெய்தல் மற்றும் துல்லியமான நிலைப்படுத்தல் தகவலை அளித்தல் ஆகியவற்றை நோக்கமாக கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

### நாட்டில் உள்ள வங்கிகளின் மேம்பாட்டிற்காக BHARAT என்ற ஒரு புதிய பிரச்சாரமானது தொடங்கப்பட்டுள்ளது.

- வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகத்தின் செயலாளர் ஸ்ரீ மனோஜ் அஹுஜா, BHARAT (வங்கிகளின் விரைவுபடுத்தப்பட்ட கிராமப்புற & விவசாய மாற்றத்தை ஏற்படுத்துதல்) என்ற வேளாண்மை நிதி உட்கட்டமைப்பின் கீழ் வங்கிகளுக்கான புதிய பிரச்சாரத்தை தொடங்கி வைத்துள்ளார்.
- இது ஒரு மாத காலம் நடைபெற கூடிய நாட்டின் முன்னெடுப்பு பிரச்சாரம் ஆகும்(ஜூலை 15, 2023 முதல் ஆகஸ்ட் 15, 2023 வரை). கிராமப்புறங்களில் உள்ள வங்கிகள், விவசாயம் மற்றும் வேளாண்மை சம்பத்தப்பட்ட நடவடிக்கைகளை தனி விருப்பம் கொண்டு துரிதமாக நிறைவேற்றுவதை நோக்கமாக கொண்டு இந்த முன்னெடுப்பனது எடுக்கப்பட்டுள்ளது என ஸ்ரீ மனோஜ் அஹுஜா தெரிவித்துள்ளார்.

### பிரதான் மந்திரி ஃபசல் பீமா யோஜனா திட்டம் (PMFBY)

- விவசாய நலத்துறை அமைச்சகமானது, விவசாயிகளுக்கு அங்கீகாரம் அளிப்பதற்காகவும், செயல்பாடுகளை மேலும் வலுப்படுத்துவதை உறுதி செய்யவும், பிரதான் மந்திரி ஃபசல் பீமா யோஜனா திட்டத்தின்(PMFBY) கீழ் பல புதிய தொழில்நுட்ப முன்னெடுப்பு திட்டங்கள் தொடங்கப்பட்டன
- இந்த முன்னெடுப்பு திட்டங்கள் மூலம் அதிநவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஒவ்வொரு கிராமத்தில் உள்ள குறு விவசாயிக்கும் முழு பயனை சென்றடைவதை நோக்கமாக கொண்டு இந்த திட்டங்களானது உருவாக்கப்பட்டுள்ளது என மத்திய அமைச்சர் தோமர் தெரிவித்துள்ளார்.

### ஊக்கமருந்து எதிர்ப்பு விதிகள் மற்றும் வழிகாட்டுதல்கள் பற்றிய தகவல்களுக்காக உதவி எண்

- ஊக்கமருந்து எதிர்ப்பு விதிகள் மற்றும் அதன் வழிகாட்டுதல்கள் பற்றிய தகவல்களை விளையாட்டு வீரர்கள் மற்றும் தடகள ஆதரவு பணியாளர்களுக்கு எளிதாக வழங்குவதற்காக தேசிய ஊக்கமருந்து தடுப்பு முகமையானது(NADA) "ஊக்கமருந்து தடுப்பு உதவி எண்ணை"(1800-119-919) அறிமுகப்படுத்தியுள்ளது.
- இதன் மூலம் அதில் ஏதேனும் குழப்பங்கள் மற்றும் சிக்கல்கள் இருப்பின் அவற்றை எளிதாக விளையாட்டு வீரர்கள் களைய முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் மிஷன்(ABDM)

- நாட்டின் டிஜிட்டல் மேம்பாட்டை ஊக்குவித்தல் மற்றும் அனைவருக்கும் தரமான சுகாதார சேவையை வழங்குவதை நோக்கமாக கொண்டு மத்திய தேசிய சுகாதார ஆணையமானது(NHA) ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் மிஷனின்(ABDM) கீழ் கிட்டத்தட்ட 100 மைக்ரோசைட்ஸ் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டது
- இந்த மைக்ரோசைட் என்பது ABDM இன் சூழ்நிலையில், அனைத்து சிறிய மற்றும் நடுத்தர அளவிலான சிகிச்சையகங்கள், மருத்துவமனைகள் (முன்னுரிமை <10 படுக்கைகள்), மருத்துவ இல்லங்கள், மருந்தகங்கள், ஆய்வகங்கள் மற்றும் ABDM-இன் கீழ் இயக்கப்படும் பிற சுகாதார வசதிகளின் தொகுப்பை உள்ளடக்கிய சிறிய வலைத்தளமாகும்.
- மேலும் இது ABDM-யின் கீழ் மாநில திட்ட இயக்குநர்களால் செயல்படுத்தப்படும் என்றும் அதன் நிதி ஆதாரங்கள் மற்றும் வழிகாட்டுதல் தேசிய சுகாதார ஆணையத்தால்(NHA) வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## சுற்றுச்சூழல் செய்திகள்

### புதுதில்லியில் பசுமை ஹைட்ரஜன் குறித்த சர்வதேச மாநாடு நடைபெற்றது

- 2023 ஆம் ஆண்டுக்கான பசுமை ஹைட்ரஜன் குறித்த சர்வதேச மாநாடானது(ICGH 2023) புது தில்லியில் மின்துறை அமைச்சர் ஆர்.கே.சிங் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது
- இந்த மாநாடானது மூன்று நாள் மாநாடு ஆகும். மேலும் பசுமை ஹைட்ரஜன் சுற்றுச்சூழல் அமைப்பை நிறுவ முயலுதல் மற்றும் பசுமை ஹைட்ரஜன் மூலம் கார்பனேற்றத்தை உலகம் முழுவதும் கொண்டு செல்வதையும் நோக்கமாக கொண்டு இந்த மாநாடானது நடைபெற்றுள்ளது.

# இராணுவச் செய்திகள்

## இந்தியா மற்றும் பிரான்ஸ் இடையே கடல்சார் கூட்டுப் பயிற்சி தொடக்கம்.



- இந்தியப் பெருங்கடல் பகுதியில் வலுவான ஒத்துழைப்பை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக இந்தியக் கடற்படை மற்றும் பிரான்ஸ் நாட்டின் கடற்படையானது விசாகப்பட்டினத்தில் ஒரு கடல்சார் கூட்டாண்மை பயிற்சியை (MPX) மேற்கொண்டது
- இந்த பாதுகாப்பு பயிற்சியில் வங்காள விரிகுடாவில் பிரெஞ்சு கடற்படைக் கப்பலான FS Surcouf உடன் INS ராணா மற்றும் எதிரி நாட்டின் ஏவுகணை அழிக்கும் கப்பலான INS சுமேடா மற்றும் உள்நாட்டிலேயே கட்டப்பட்ட கடல் ரோந்துக் கப்பல்கள் இணைந்து கூட்டுப் பயிற்சியை மேற்கொண்டுள்ளன.

## ஜப்பான்-இந்தியா இடையிலான கூட்டுக் கடல்சார் பயிற்சியான "JIMEX 23" தொடக்கம்.

- ஜப்பான் மற்றும் இந்தியா இடையிலான கடல்சார் பயிற்சியின் ஏழாவது பதிப்பான "JIMEX 23 ஆனது விசாகப்பட்டினத்தில் ஜூலை 05 அன்று இந்திய கடற்படை தலைமையில் தொடங்குகிறது.
- இந்த பயிற்சியில் ஜப்பான் கடல்சார் தற்காப்புப் படைப் பிரிவுகளும், இந்திய கடற்படையின் முக்கிய கடற்படை கப்பல்களும் பங்கேற்கின்றன. மேலும் இந்தப் பயிற்சியானது ஆறு நாட்கள் இரண்டு கட்டங்களாக நடத்தப்படும் என கடற்படையால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 'Nomadic Elephant 2023'

- இந்தியாவுக்கும் மங்கோலியாவுக்கும் இடையிலான கூட்டு ராணுவப் பயிற்சியின் 15வது பதிப்பான 'Nomadic Elephant 2023' ஆனது மங்கோலியாவில் உள்ள உலான்பாதரில் தொடங்கியுள்ளது. இந்த கூட்டு ராணுவ பயிற்சியானது ஜூலை 17 முதல் 31 ஆம் தேதி வரை நடைபெற உள்ளது.
- "Nomadic Elephant" என்ற கூட்டு ராணுவ பயிற்சியானது இந்தியா மற்றும் மங்கோலியா இடையிலான வருடாந்திர கூட்டு பயிற்சியாகும். கடந்த பதிப்பானது அக்டோபர் 2019 இல் பக்லோவில் உள்ள சிறப்புப் படைகள் பயிற்சி பள்ளியில் நடைபெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## அறிவியல்/ தொழில்நுட்பம்

### SSLV – ஐ முழுமையாக தனியாருக்கு மாற்ற இஸ்ரோ திட்டம்.



- 500 கிலோ எடைகொண்ட செயற்கைக்கோள்களை தேவைக்கேற்ப சேவைகளை வழங்க முற்படும் ராக்கெட்டின் இரண்டு மேம்பாட்டு விமான சோதனைகளை நடத்திய பிறகு, இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமானது(இஸ்ரோ) விரைவில் அதன் சிறிய செயற்கைக்கோள் ஏவுகணை வாகன ஊர்தியை (SSLV) தனியாருக்கு அல்லது தனியார் விண்வெளி சம்பத்தப்பட்ட நிறுவங்களுக்கு மாற்றத் திட்டமிட்டுள்ளது என அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.
- இந்த சிறிய ரக ராக்கெட்டை வணிக தொழிலுக்கு மாற்றுவதற்கான வழியைத் தேர்வு செய்ய இந்திய விண்வெளி நிறுவனம் முடிவு செய்துள்ளதாகவும் SSLV-ஐ உற்பத்தி மட்டுமல்லாமல், முழுமையாக தனியாருக்கு மாற்றுவோம் என மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

### தசைநார் சிதைவு நோயை கட்டுப்படுத்துவதற்கான சிகிச்சை முறையை, தமிழகம் மற்றும் ஜப்பான் நாட்டு மருத்துவ அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

- தசைநார் சிதைவு நோய் என்பது சிறுவர்களுக்கு ஏற்படக் கூடிய மிக அரிய வகை மரபணு பாதிப்பாகும். இதனால் தசைகளின் இயக்கம் முடங்கி முற்றிலும் நடமாட இயலாத நிலை ஏற்படும்.
- இந்த நோயினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் 'டிஸ்ரோபின்' என்ற புரதம் குறைந்துவிடும் இந்நிலையை தடுப்பதற்காக சில மருந்து வழி உணவு பொருட்களின் மூலம் ரத்தத்தில் 32 சதவீத, டிஸ்ரோபின் புரத அளவை, 'பீட்டா குளூக்கோன்' என்ற உணவுப் பொருள் அதிகரிப்பது மருத்துவ ஆய்வில் தெரிய வந்துள்ளது. அதன்படி, இந்த பீட்டா குளூக்கோனை உட்கொண்டால், நோய் எதிர்பாற்றலில் சில மாற்றங்களை உருவாக்கி, 45 – 50 நாட்களுக்குள் தசைகளின் வலிமையை அதிகரிக்கலாம் என ஆய்வின் மூலம் தெரிய வந்துள்ளது.

### சந்திரயான் 3 விண்கலமானது வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டது.

- நாட்டின் மூன்றாவது நிலவுப் பயண திட்டமான சந்திரயான் 3 ஆனது சதீஷ் தவான் விண்வெளி மையமான ஸ்ரீஹரிகோட்டாவின் இரண்டாவது ஏவுதளத்திலிருந்து வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டுள்ளது.
- இந்த ஏவுதலுக்கு LVM-3 ராக்கெட் பயன்படுத்தப்பட்டுள்ளது. சந்திரனின் சுற்றுப்பாதையை அடைதல், லேண்டரைப் பயன்படுத்தி நிலவின் மேற்பரப்பில் மென்மையாக தரையிறங்குதல் மற்றும் நிலவின் மேற்பரப்பை முற்றிலும் ஆய்வு செய்தல் ஆகிய நோக்கங்களுக்காக இந்த சந்திராயன் 3 விண்கலமானது செலுத்தப்பட்டுள்ளது.

### ககன்யான் விண்கலத்தின் "சேவை தொகுதி உந்துவிசை அமைப்பின்" சோதனையில் இஸ்ரோ வெற்றி.



- இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமானது(ISRO) தமிழ்நாட்டின் மகேந்திரகிரியில் உள்ள இஸ்ரோ வளாகத்தில்(IPRC) 'ககன்யான் சேவை தொகுதி உந்து அமைப்பின்(Service Module Propulsion System)" சோதனையில் வெற்றி பெற்றுள்ளது.
- இந்த சோதனையில் 100 N உந்துதல் கொண்ட 16 எதிர்வினை கட்டுப்பாட்டு அமைப்பு (RCS) த்ரஸ்டர்கள் மற்றும் 440 N உந்துதல் கொண்ட ஐந்து திரவ அபோஜி மோட்டார் (LAM) இன்ஜின்கள் பயன்படுத்தப்பட்டன என்று ISRO தனது அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளது.
- (ககன்யான் திட்டம் – மனிதர்களை விண்வெளிக்கு அனுப்புவதற்கான இந்தியாவின் நட்சத்திர திட்டமாகும்).

# விளையாட்டுச் செய்திகள்

## இந்தியா எட்டாவது முறையாக ஆசிய கபடி சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளது.



- தென் கொரியாவின் புசானில் உள்ள டோங்-ஈயுய் தொழில்நுட்ப வளாகத்தின் சியோக்டாங் கலாச்சார மையத்தில் நடைபெற்ற மிகவும் எதிர்பார்க்கப்பட்ட இந்த ஆசிய கபடி சாம்பியன்ஷிப் இறுதி போட்டியில் ஈரானுக்கு எதிராக இந்திய அணியானது வென்று பட்டத்தை வென்றுள்ளது.
- இந்த இறுதிப் போட்டியில் ஈரானுக்கு எதிராக 42-32 என்ற புள்ளிகள் கணக்கில் இந்திய அணியானது வென்றுள்ளது. மேலும் ஒன்பது பதிப்புகளில் எட்டாவது முறையாக இந்தியா பட்டத்தை வென்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## லாசன்னே டயமண்ட் லீக் பட்டம்



- நட்சத்திர இந்திய ஈட்டி எறிதல் வீரரான நீரஜ் சோப்ரா 2023 லொசேன் டயமண்ட் லீக் போட்டியின் இறுதி சுற்றில் 87.66 மீட்டர் தூரம் எறிந்து மதிப்புமிக்க பட்டத்தை வென்றுள்ளார்.
- இந்த இறுதி போட்டியில் நீரஜ் 87.66 மீட்டர் தூரம் எறிந்து முதல் இடத்தையும், ஜெர்மனியின் ஜூலியன் வெப்பர் 87.03 மீட்டர் தூரம் எறிந்து இரண்டாவது இடத்தையும், செக் நாட்டின் ஜக்குப் வாட்லெச் 86.13 மீட்டர் தூரம் எறிந்து மூன்றாவது இடத்தையும் வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## ஆசிய கலப்பு இரட்டையர் ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப் பட்டத்தை இந்திய ஜோடி வென்றுள்ளது.



- சீனாவின் ஹாங்சோவில் நடைபெற்ற ஆசிய கலப்பு இரட்டையர் ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் தீபிகா பல்லிக்கால் கார்த்திக் மற்றும் ஹரிந்தர்பால் சிங் சந்து ஜோடியானது மலேசிய ஜோடியான இவான் யுவன் மற்றும் ரேச்சல் அர்னால்ட் ஜோடியை 11-10, 11-8 என்ற புள்ளிகள் கணக்கில் வீழ்த்தியுள்ளது.
- இந்த இறுதி போட்டியில் இந்திய ஜோடியானது மலேசிய ஜோடியான இவான் யுவன் மற்றும் ரேச்சல் அர்னால்ட் ஜோடியை 11-10, 11-8 என்ற புள்ளிகள் கணக்கில் வீழ்த்தி சாம்பியன் பட்டத்தை பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## மூத்த தேசிய நீர்வாழ் சாம்பியன்ஷிப் போட்டியில் "ஆர்யன் நெஹ்ரா" தங்கம் வென்றுள்ளார்.

- கச்சிபௌலி மைதானத்தின் அக்வாடிக்ஸ் வளாகத்தில் நடைபெற்ற மூத்த தேசிய நீர்வாழ் சாம்பியன்ஷிப் போட்டியில் ஆடவருக்கான 400 மீட்டர் ஃப்ரீஸ்டைல் பிரிவில் குஜராத்தைச் சேர்ந்த ஆர்யன் நெஹ்ரா 3:52.55 நிமிடங்களில் இலக்கை எட்டி தங்கம் வென்றுள்ளார்.
- டெல்லியைச் சேர்ந்த குஷாக்ரா ராவத் (3:55.45) என்ற வீரர் மற்றும் கர்நாடகாவின் அனீஷ் எஸ். கவுடா (3:57.86) ஆகியோர் முறையே அடுத்தடுத்த வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளனர். மேலும் பெண்களுக்கான 200 மீட்டர் பிரிவில் கர்நாடகாவின் ஏ.கே. வினேஷா 2:37.35 நிமிடங்களில் இலக்கை எட்டி தங்கம் வென்றுள்ளார்.

## ஸ்பெயினில் நடைப்பெற்ற ஏடிபி இரட்டையர் பிரிவில் யுகி பாம்ப்ரி சாம்பியன் பட்டத்தை வென்றார்

- ஸ்பெயினில் நடைப்பெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான ஏடிபி உலக சுற்றுப்பயணத்தில்

யுகி பாம்ப்ரி தனது முதல் பட்டத்தை வென்றுள்ளார்.

- இவர் மற்றும் தென்னாப்பிரிக்க நாட்டை சேர்ந்த லாயிட் ஹாரிஸ் இருவரும் புல்வெளி போட்டியில் 6-3 6-4 என்ற புள்ளிகள் கணக்கில் டச்சு மற்றும் ஆஸ்திரிய ஜோடியான ராபின் ஹாஸ் மற்றும் பிலிப் ஓஸ்வால்ட் ஜோடியை தோற்கடித்து மல்லோர்கா சாம்பியன்ஷிப்பில் இரட்டையர் கோப்பையை வென்றுள்ளனர்.

## அர்மண்ட் டுப்லாண்டிஸ் டயமண்ட் லீக் போட்டியில் வெற்றி.

- ஸ்டாக்ஹோமில் மழையால் பாதிக்கப்பட்ட டயமண்ட் லீக் நிகழ்வில், கம்பு ஊன்றி தாண்டுதல் நட்சத்திர வீரரான அர்மண்ட் டுப்லாண்டிஸ் போட்டியில் வென்று பட்டத்தை கைப்பற்றியுள்ளார்.
- இவர் 6.05 மீ தூர இலக்கை எட்டி எர்னஸ்ட் ஓபியானாவிடமிருந்து 23 செமீ தூரத்திலிருந்து வசதியாக வெல்ல போதுமானதாக அமைந்தது. மேலும் இவர் ஐந்து கோடைகால போட்டிகளில் நான்காவது முறையாக "மோண்டோ" 6 மீ பிரிவில் வென்றுள்ளார் என்பது குறிப்பிடதக்கதாகும்.

## உலக வில்வித்தை யூத் சாம்பியன்ஷிப் போட்டி




- அயர்லாந்தில் உள்ள லிமெரிக்கில் நடைபெற்ற உலக வில்வித்தை இளைஞர் சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் இஸ்ரேல் நாட்டின் அணியை தோற்கடித்து, ஜூனியர் கலப்பு குழு கலவை பிரிவில் இந்திய வில்வித்தை வீரர்களான அவ்னீத் கவுர் மற்றும் பிரயன்ஷ் தங்கம் வென்றுள்ளனர்.
- இந்த விறுவிறுப்பான இறுதி ஆட்டத்தில் இந்திய வீரர்கள் 146-144 என்ற புள்ளிக்கணக்கில் இஸ்ரேலை தோற்கடித்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் கேடட் கலப்பு போட்டியில் இந்தியாவின் ஐஸ்வர்யா ஷர்மா மற்றும் மானவ் ஜாதவ் ஆகியோர் மெக்சிகோவை வீழ்த்தி வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## கனடா ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்திய வீரர் சாம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

- கனடாவின் கால்கேரியில் 2023 ஆம் ஆண்டுக்கான கனடா ஓபன் பேட்மிண்டன் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்திய வீரர் லக்ஷ்யா சென் ஜூலை 09 அன்று இரவு சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளார்.
- இவர் சீனாவின் லி ஷி ஃபெங்கை 21-18, 22-20 என்ற புள்ளிகள் கணக்கில் வீழ்த்தி இந்த சாம்பியன் பட்டத்தை பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் ஏறக்குறைய ஒரு வருடத்திற்குப் பிறகு காமன்வெல்த் சாம்பியனான லக்ஷ்யா சென்னின் முதல் BWF உலக டூர் பட்டம் இது என்பது இவரின் சிறப்பாகும்.

## உலக துப்பாக்கி சுடுதல் பாரா ஸ்போர்ட் (WSPS) உலகக் கோப்பை



- உலக துப்பாக்கி சுடுதல் பாரா ஸ்போர்ட் (WSPS) உலகக் கோப்பையில் P4 கலப்பு 50 மீட்டர் பிரிவில் இந்தியாவின் ருத்ரன்ஷ் கண்டேல்வால் மற்றும் நிஹால் சிங் முறையே தங்கம் மற்றும் வெள்ளி பதக்கங்களை வென்றுள்ளனர்.
- 16 வயதான ருத்ரன்ஷ் இந்த இறுதிப் போட்டியில் 231.1 புள்ளிகளைப் பெற்று 2020 டோக்கியோ பாராலிம்பிக் போட்டியில் தங்கம் வென்ற மற்றும் கேல் ரத்னா விருது பெற்ற மனீஷ் நர்வாலின் உலக சாதனையை முறியடித்தார். அதே நேரத்தில் நிஹால் சிங் 222.2 புள்ளிகளை பெற்று இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## நொய்டாவில் தொடங்கிய காமன்வெல்த் பளு தூக்குதல் சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியா மூன்று தங்கப் பதக்கங்களை வென்றுள்ளது.




- உத்திர பிரதேசத்தின் நொய்டாவில் உள்ள கவுதம் புத் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற காமன்வெல்த் பளுதூக்குதல் சாம்பியன்ஷிப் போட்டியின் தொடக்க நாளில்(ஜூலை 12 இல்) இந்தியா 3 தங்கப் பதக்கங்களை வென்றுள்ளது.
- 40 கிலோ இளையோர் பிரிவில் தடகள வீராங்கனை ஜோத்ஸ்னா சபர் தங்க பதக்கத்தையும், 45 கிலோ யூத் & ஜூனியர் பிரிவில் அஸ்மிதா , 45 கிலோ மூத்தோர் பிரிவில்

கோமல் கோஹர் முறையே தங்கங்களை வென்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## 2023 ஆம் ஆண்டுக்கான பாரா தடகள உலக சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவிற்கு வெள்ளிப் பதக்கம்.



- தற்போது நடைபெற்று வரும் 2023 ஆம் ஆண்டுக்கான பாரா தடகள உலக சாம்பியன்ஷிப் போட்டியில் உயரம் தாண்டுதல் T47 பிரிவில் இந்தியாவின் நிஷாத் குமார், வெள்ளிப் பதக்கத்தை வென்றுள்ளார்.
- இந்த அசாதாரண முயற்சியின் வாயிலாக கிடைத்த வெற்றியின் மூலம் இந்த போட்டியில் பதக்கம் வென்ற இரண்டாவது தடகள வீரர் என்ற பெருமையை நிஷாத் பெற்றுள்ளார்.

## 2023 ஆம் ஆண்டுக்கான காமன்வெல்த் பளுதூக்குதல் சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவிற்கு தங்கம்.



- உத்திரபிரதேசத்தின் நொய்டாவில் நடைபெற்ற காமன்வெல்த் பளுதூக்குதல் சாம்பியன்ஷிப் போட்டியில் மகளிர் 49 கிலோ பிரிவில் இந்திய வீராங்கனை ஞானேஸ்வரி யாதவ் தங்கம் வென்றுள்ளார்.
- சத்தீஷ்கரை சேர்ந்த ஞானேஸ்வரி 176 கிலோ (78 கிலோ+98 கிலோ) பளுவை தூக்கி மேடையில் நின்றார். இந்த போட்டியில் ஜில்லி 169 கிலோ (75 கிலோ+94 கிலோ)பளுவை தூக்கி நின்றதன் மூலம் தொடர்ந்து இரண்டாவது இடத்தை பிடித்து வெள்ளிப் பதக்கத்தை வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## 2023 ஆம் ஆண்டுக்கான ஆசிய தடகள சாம்பியன்ஷிப் போட்டியின் 10000 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் இந்தியாவிற்கு வெண்கலப் பதக்கம்.

- தாய்லாந்தின் தலைநகரமான பாங்காக்கில் நடைபெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான ஆசிய தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் 10000 மீட்டர் ஓட்டப் பந்தய பிரிவில் இந்திய வீரரான அபிஷேக் பால் வெண்கலப் பதக்கம் வென்றுள்ளார்.
- 29:33.26 என்ற புள்ளிகள் கணக்கில் இந்த போட்டியில் இவர் வெண்கல பதக்கத்தை பெற்றுள்ளார். மேலும் கடந்த ஆண்டு குஜராத்தில் அபிஷேக் பால் 28:54.98 வினாடிகளில் எடுத்ததே இவரின் சிறந்த தனிப்பட்ட சாதனை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## 25-வது ஆசிய தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் முதல் தங்கப் பதக்கத்தை "ஜோதி யார்ராஜி" வென்றுள்ளார்.




- தாய்லாந்தின் பாங்காக்கில் நடைபெற்ற 25வது ஆசிய தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் பெண்களுக்கான 100 மீட்டர் தடை ஓட்டம் இறுதிப் போட்டியில் இந்திய வீராங்கனையான "ஜோதி யார்ராஜி" தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.
- 23 வயதான இவர் இந்த பந்தயத்தை வெறும் 13.09 வினாடிகளில் முடித்து, தற்போது நடைபெற்று வரும் இந்த ஆண்டுக்கான ஆசிய தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவுக்கான முதல் தங்கப் பதக்கத்தை பெற்றுள்ளார்.

## ஆசிய தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் இந்திய குண்டெறிதல் வீரர் தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.




- இந்தியாவின் 28 வயதான குண்டெறிதல் வீரரான தஜிந்தர்பால் சிங் தூர் ஆசிய தடகள சாம்பியன்ஷிப் போட்டியின் ஆண்களுக்கான குண்டெறிதல் பிரிவில் தனது இரண்டாவது தங்கப் பதக்கத்தை வென்றுள்ளார்.
- இவர் இந்த போட்டியில் 20.23 மீட்டர் தூரம் எறிந்து முதலிடத்தை பிடித்துள்ளார். மேலும் இவர் 2019 ஆம் ஆண்டுக்கான ஆசிய தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் தங்கமும் 2017 ஆண்டின் போட்டியில் வெள்ளிப் பதக்கமும் வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## விம்பிள்டனின் கலப்பு இரட்டையர் பிரிவில் உக்ரைனின் லியுட்மிலா ஜோடியானது சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளது.



- உக்ரைனின் லியுட்மிலா கிச்செனோக் மற்றும் குரோஷியாவின் மேட் பாவிக், விம்பிள்டனின் கலப்பு இரட்டையர் பிரிவில் வெற்றி பெற்று சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளனர்.
- ஏழாம் நிலை வீரரான மற்றும் 30 வயதான கிச்செனோக் மற்றும் பாவிக் ஜோடியானது 6-4 6-7(9) 6-3 என்ற புள்ளிகள் கணக்கில் சீனாவின் சூ யிஃபான் ஜோரன் மற்றும் பெல்ஜியத்தின் விலீஜென் ஜோடியை வீழ்த்தி இந்த வெற்றியை கைப்பற்றியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## அல்காரஸ் ஜோகோவிச்சை வீழ்த்தி தனது முதல் விம்பிள்டன் பட்டத்தை வென்றுள்ளார்.

- ஏழு முறை சாம்பியனான செர்பியாவின் நோவக் ஜோகோவிச்சை தோற்கடித்து, தனது முதல் விம்பிள்டன் பட்டத்தை ஸ்பெயினின் கார்லோஸ் அல்கராஸ் வென்று சாதனை படைத்து 24வது கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வென்றுள்ளார்.
- உலகின் முதல் நிலை வீரரான அல்கராஸ் 1-6, 7-6 (8/6), 6-1, 3-6, 6-4 என்ற புள்ளிகளுடன் நான்கு மணி நேரம் 42 நிமிடங்களுக்குப் பிறகு வெற்றியை பெற்றுள்ளார். கடந்த ஆண்டு அவர் யுஎஸ் ஓபன் பட்டத்தைத் தொடர்ந்து 20 வயதான ஸ்பானியருக்கு இந்த வெற்றியானது இரண்டாவது பெரிய வெற்றியாகும்.

## ISSF இளையோர் உலக சாம்பியன்ஷிப் போட்டியில் ஸ்கீட் கலப்பு குழு பிரிவில் இந்தியாவிற்கு வெள்ளிப் பதக்கம்.



- கொரியாவின் சாங்வான் நகரில் நடைபெற்ற ISSF இளையோர் உலக சாம்பியன்ஷிப் போட்டியின் 4 ஆவது நாளில் நிகழ்ந்த துப்பாக்கிச் சுடுதல் போட்டியில் இந்திய அணியானது வெள்ளிப் பதக்கத்தை வென்று பதக்க தரவரிசை பட்டியலில் 2-வது இடத்தை பிடித்துள்ளது.
- இந்திய ஜோடியான சஞ்சனா சூட் மற்றும் ஹர்மெஹர் சிங் லல்லி ஸ்கீட் கலப்பு குழு பிரிவில் இந்த வெள்ளிப் பதக்கக்கத்தை 26-24 என்ற கணக்கில் இந்தியாவிற்கு வென்று தந்துள்ளனர்.

## டேக்வாண்டோ சாம்பியன்ஷிப் போட்டி



- பாரா ஒலிம்பிக்ஸ் வீரர் மற்றும் சண்டிகர் பல்கலைக்கழக மாணவியுமான அருணா தன்வார் ஆஸ்திரேலியாவில் நடந்த மூன்று நாள் டேக்வாண்டோ சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவிற்காக மூன்று தங்கப் பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ளார்.
- தற்போது உலக தரவரிசை பட்டியலில் 4 ஆவது இடத்தில் உள்ள இவர், ஜூலை 2023 இல் ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற பிரசிடென்ட் கோப்பை பாரா டேக்வாண்டோ சாம்பியன்ஷிப் மற்றும் ஆஸ்திரேலியா ஓபன் பாரா டேக்வாண்டோ சாம்பியன்ஷிப் மற்றும் ஓசியானியா பாரா டேக்வாண்டோ சாம்பியன்ஷிப் ஆகியவற்றில் மூன்று தங்கப் பதக்கங்களை வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## ISSF இளையோர் துப்பாக்கி சுடுதல் உலக சாம்பியன்ஷிப் போட்டி



- தென் கொரியா நாட்டின் சாங்வான் நகரில் நடைபெற்ற 2023 ஆண்டிற்கான ISSF இளையோர் துப்பாக்கி சுடுதல் உலக சாம்பியன்ஷிப் போட்டியில் ஆண்களுக்கான தனிநபர் 50 மீட்டர் சிறு துப்பாக்கி பிரிவில் இந்தியாவின் கமல்ஜீத் தங்கப் பதக்கத்தை வென்றுள்ளார்.
- 90 துப்பாக்கி சுடுதல் வீரர்களைக் கொண்ட இந்த ISSF தொடரில் இந்தியாவானது 5 வெண்கலம், 6 வெள்ளி, 6 தங்கம் என 17 பதக்கங்களை கைப்பற்றியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## உலக பல்கலைகழகங்களுக்கு இடையேயான விளையாட்டு போட்டி தொடரில் இளவேனில் தங்கம் வென்றுள்ளார்.

- 2023 ஆம் ஆண்டிற்கான உலக பல்கலைக்கழங்களுக்கு இடையேயான பல்துறை விளையாட்டு போட்டி தொடரில் 10 மீ. ஏர் ரைபில் பிரிவில் இளவேனில் வாலறிவன் தங்கம் வென்றுள்ளார்.
- இந்த இறுதி போட்டியில் மகளிருக்கான 10 மீட்டர் ஏர் ரைபிள் பிரிவில் 252.5 புள்ளிகளை

பெற்று இவர் தங்கம் வென்றுள்ளார். மேலும் கடந்த 2019 ஆம் ஆண்டு இதே தொடரில் இவர் வெள்ளிப்பதக்கத்தை வென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## விருதுகள்

### புகழ்பெற்ற தொழிலதிபருக்கு 'பிக் இம்பாக்ட் விருது 2023' வழங்கப்பட்டுள்ளது.

- சிம்லாவில் பிக் எஃப்எம் விருது வழங்கும் நிகழ்ச்சியில் "பிக் இம்பாக்ட் விருது 2023" ஆனது உள்ள ஒரு புகழ்பெற்ற தொழிலதிபரான டாக்டர் சஞ்சீவ் ஜுனேஜா அவர்களுக்கு வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளார்.
- இமாச்சல பிரதேச முதலமைச்சர் தாக்கூர் சுக்விந்தர் சிங் சுகு, துறையில் குறிப்பிடத்தக்க சிறந்த மற்றும் தனித்துவமான பங்களிப்பைச் செய்ததற்காக இந்த விருதை வழங்கி கௌரவித்தார்.

### மேரி கோம் அவர்களுக்கு இங்கிலாந்தின் குளோபல் இந்தியன் ஐகான் விருது வழங்கப்பட்டுள்ளது.



- இந்திய விளையாட்டு ஜாம்பவான் மற்றும் பெண்கள் குத்துச்சண்டையில் இந்தியாவின் முதல் ஒலிம்பிக் பதக்கம் வென்ற மேரி கோம் அவர்களுக்கு, இங்கிலாந்தின் வின்ட்சரில் இந்த ஆண்டுக்கான U.K.- இந்தியா விருதுகளில் குளோபல் இந்தியன் ஐகான் என்று விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

### மதிப்புமிக்க மார்க் ஷண்ட் விருது இந்திய திரைப்படத் தயாரிப்பாளருக்கு வழங்கப்பட்டுள்ளது.



- இங்கிலாந்து நாட்டின் லண்டனில் நடைபெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான விருது வழங்கும் நிகழ்ச்சியில் அந்நாட்டின் அரசர் கிங்ஸ் சார்லஸ் III மற்றும் ராணி கமிலா ஆகியோர் மதிப்புமிக்க மார்க் ஷண்ட் விருது மற்றும் தாரா விருதை ஆஸ்கார் விருது பெற்ற இந்திய திரைப்படத் தயாரிப்பாளரான கார்த்திகி கோன்சால்வ்ஸ் மற்றும் இந்தியாவைச் சேர்ந்த வனவிலங்கு பாதுகாப்புக் குழுவிற்கு வழங்கியுள்ளார்.
- தீ எலிபாண்ட் விஸ்பிரஸ் இன் பட இயக்குநர் கார்த்திகி மற்றும் தமிழ்நாட்டைச் சேர்ந்த வனத்துறையினர் மனித-வனவிலங்குகளின் சகவாழ்வுக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியதற்காக இங்கிலாந்து ராயல்ஸால் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

### சேகர் கபூர் சிறந்த இயக்குனருக்கான பிரிட்டிஷ் தேசிய விருதை வென்றுள்ளார்.



- இங்கிலாந்தில் நடைப்பெற்ற பிரிட்டிஷ் தேசிய விருது வழங்கும் விழாவில், "What's Love Got To Do With It?" என்ற திரைப்படத்திற்காக சேகர் கபூருக்கு சிறந்த இயக்குனருக்கான விருதானது வழங்கப்பட்டுள்ளது.
- இந்த விழாவில் மொத்தம் ஒன்பது பிரிவுகளில் இந்த திரைப்படமானது பரிந்துரைக்கப்பட்ட நிலையில் சிறந்த திரைக்கதை மற்றும் சிறந்த துணை நடிகர், சிறந்த இயக்குனர், சிறந்த பிரிட்டிஷ் திரைப்படம் என நான்கு விருதுகளை இந்த படம் வென்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் சமீபத்தில், IGFன் UK-இந்தியா விருதுகளில் சேகர் கபூருக்கு "யுகே-இந்தியா உறவுகளுக்கான வாழ்நாள் பங்களிப்பு" விருது வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### கிராண்ட் கிராஸ் ஆஃப் தி லீஜியன் ஆஃப் ஹானர் விருது



- பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரானால், பிரான்சின் உயரிய சிவிலியன் மற்றும் ராணுவ கவுரவமான கிராண்ட் கிராஸ் ஆஃப் தி லீஜியன் ஆஃப் ஹானர் விருதைப் பெற்ற முதல் இந்திய பிரதமர்

என்ற பெருமையைப் பிரதமர் நரேந்திர மோடி பெற்றுள்ளார் .

- மேலும் தென்னாப்பிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா, கிங் சார்லஸ் - அப்போதைய வேல்ஸ் இளவரசர், முன்னாள் அதிபர் போன்ற முக்கிய உலகத் தலைவர்களின் வரிசையில் சேர்ந்தார். ஜேர்மனி ஏஞ்சலா மெர்க்கல், பௌட்ரோஸ் பூட்ரோஸ்-காலி, ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் பொதுச் செயலாளர் உள்ளிட்டோர் அடங்குவர்.
- குறிப்பு:
- 1802 இல் நெப்போலியன் போனபார்ட்டால் நிறுவப்பட்டது, தி லெஜியன் ஆஃப் ஹானர் ஐந்து வகுப்புகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது (குறைந்த மற்றும் உயர்). ரிப்பனின் நிறம் சிவப்பு மற்றும் பேட்ஜ் ஒக் மற்றும் லாரல் மாலையில் தொங்கவிடப்பட்ட ஐந்து கைகள் கொண்ட மால்டிஸ் நட்சத்திரமாகும். இந்த விருதின் உறுப்பினர் பிரான்ஸ் நாட்டினருக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தாலும், பிரான்சுக்கு சேவை செய்யும் அல்லது அதன் இலட்சியங்களை நிலைநிறுத்தும் வெளிநாட்டு பிரஜைகளுக்கும் லெஜியன் என்ற தனித்துவம் வழங்கப்படலாம்.
- லெஜியன் ஆஃப் ஹானர் என்பது அனைத்து செயல்பாட்டுத் துறைகளிலும் மிகவும் தகுதியான குடிமக்களுக்கு வழங்கப்படும் மிக உயர்ந்த பிரெஞ்சு அலங்காரமாகும். இது இரண்டு நூற்றாண்டுகளாக முக்கிய பிரமுகர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- ரிப்பனின் நிறம் சிவப்பு மற்றும் பேட்ஜ் ஒக் மற்றும் லாரல் மாலையில் தொங்கவிடப்பட்ட ஐந்து கைகள் கொண்ட மால்டிஸ் நட்சத்திரமாகும். முன்புறத்தில் குடியரசின் உருவச்சிலையும், பின்புறத்தில் இரண்டு மூவர்ணக் கொடிகளும் பிரெஞ்சு மொழியில் எழுதப்பட்ட 'கௌரவம் மற்றும் தந்தை நாடு' என்ற பொன்மொழியால் சூழப்பட்டுள்ளன.
- லெஜியன் ஆஃப் ஹானரின் உறுப்பினர் என்பது பிரெஞ்சு குடிமக்களுக்கு மட்டுமே என்றாலும், பிரான்சுக்கு சேவை செய்யும் அல்லது அதன் இலட்சியங்களை நிலைநிறுத்தும் வெளிநாட்டுப் பிரஜைகளுக்கும் லெஜியன் என்ற தனித்துவம் வழங்கப்படலாம். இதுவரை 79,000 க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் உள்ளனர் மற்றும் பிரான்ஸ் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 300 வெளிநாட்டு பிரஜைகளை இந்த கௌரவத்துடன் அலங்கரிக்கிறது.

## "சாம்பியன் ஆஃப் ஹெல்த்கேர் இன்னோவேஷன் விருது



- அமெரிக்காவின் அமி பெரா என்ற மருத்துவர் சுகாதாரம் தலைமைத்துவ கவுன்சிலின் "சாம்பியன் ஆஃப் ஹெல்த்கேர் இன்னோவேஷன் விருதை" சமீபத்தில் பெற்றதை தொடர்ந்து, இந்த விருதை பெற்ற முதல் இந்திய அமெரிக்க – காங்கிரஸார் ஆவார்.
- நாட்டில் உயர்தர, மலிவு சுகாதார பராமரிப்புக்கான ஆதரவுகளை அங்குள்ள பொது மக்களுக்கு வழங்கியதற்காக இந்த விருதானது அவருக்கு வழங்கப்பட்டுள்ளது என சுகாதாரம் தலைமைத்துவ கவுன்சிலானது தெரிவித்துள்ளது.

## 2023 ஆம் ஆண்டிற்கான இந்தியாவின் சிறந்த சமூக தாக்க நிறுவனம் என்ற விருதானது Primero Skills க்கு வழங்கப்பட்டுள்ளது.

- கடைசி 4 ஆண்டுகளில் தொடர்ச்சியாக மூன்றாவது முறையாக THSC அமைப்பின் சிறந்த சமூக தாக்க நிறுவனத்திற்கான விருதானது Primero Skills நிறுவனத்திற்கு ஜூலை 2023 இல் வழங்கப்பட்டுள்ளது.
- சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் திறன் கவுன்சில்(THSC) ஆனது, 282000 மணிநேரங்களுக்கு 60% பெண்களுடன் 14,000 இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கும் முன்னெடுப்பு முயற்சியினை மேற்கொண்டதற்காக இந்த விருதானது வழங்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மத்திய நிலக்கரி அமைச்சகமானது "சிறந்த ஈடுபாடு" என்ற தேசிய விருதை வென்றுள்ளது.

- மத்திய நிலக்கரி அமைச்சகமானது சமீபத்தில் வர்த்தக அமைச்சகத்தால் GeM மூலம் மின்-கொள்முதலில் செய்த சாதனைகளுக்காக "சிறந்த ஈடுபாடு" பிரிவில் விருதினைப் பெற்றுள்ளது.
- 2023-24 நிதியாண்டில், நிலக்கரி பொதுத் துறை நிறுவனங்களானது(PSUs) கிட்டத்தட்ட ரூ. 21,500 கோடி மதிப்புள்ள பல்வேறு ஏலங்களை வெளியிடுவதன் மூலம் GeM மீது அசைக்க முடியாத நம்பிக்கையை வெளிப்படுத்தியுள்ளதே இந்த விருதுகளை பெறுவதற்கான காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

- இதன் கீழ் இயங்கும் கோல் இந்தியா நிறுவனமானது(CIL) "ரைசிங் ஸ்டார்" மற்றும் என்எல்சி இந்தியா நிறுவனத்திற்கு "டைம்லி பேமெண்ட்ஸ்" பிரிவுகளில் விருதுகளானது வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## புண்யபூஷண் விருது



- மாபெரும் புகழ்பெற்ற நடிகரும் மனநல மருத்துவருமான டாக்டர் மோகன் ஆகாஷேவுக்கு மதிப்புமிக்க 35வது புண்யபூஷன் விருதானது பாலகந்தர்வ ரங் மந்திரில் புண்யபூஷன் (டிரைடல் புனே) அறக்கட்டளை சார்பில் வழங்கப்பட்டுள்ளது.
- மத்திய அரசு இவருக்கு 1996 ஆம் ஆண்டு மதிப்புமிக்க மற்றும் உயரிய "சங்கீத நாடக அகாடமி விருதை" வழங்கி கௌரவித்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும். புண்யபூஷன் அறக்கட்டளை 1989 ஆம் ஆண்டு நிறுவப்பட்டு, தொடர்ச்சியாக புனேவின் குடிமக்களுக்கு திறமைகளை போற்றும் விதமாக ஒவ்வொரு ஆண்டும் விருதினை வழங்கி வரும் அமைப்பாகும்.

## உத்யோக் ரத்னா' விருது

- மகாராஷ்டிரா மாநில அரசாங்கத்தின் 'உத்யோக் ரத்னா' விருதானது நாட்டின் மூத்த தொழிலதிபரும், மிகப்பெரிய டாடா சன்ஸ் நிறுவனத்தின் தலைவருமான ரத்தன் டாடா அவர்களுக்கு வழங்க முடிவு செய்துள்ளதாக, அம்மாநில தொழில் துறை அமைச்சர் உதய் சமந்த் அறிவித்துள்ளார்.
- சிறந்த நபர்களுக்கு அவர்களின் முயற்சி மற்றும் பங்களிப்பிற்காக தொழிலதிபர் மற்றும் தொழில்முனைவோர் ஆகியோர்களுக்கு மகாராஷ்டிரா மாநிலத்திலிருந்து வழங்கப்படும் மிக உயரிய விருது இதுவாகும்.

## உலகளாவிய வர்த்தக சேவைகள் ஏற்றுமதியில் இந்தியா தனது பங்கை இருமடங்காகியுள்ளது – உலக வங்கி மற்றும் WTO அறிக்கை.

- 2005ல் 2 சதவீதமாக இருந்த உலக வர்த்தக சேவைகள் ஏற்றுமதியில் இந்தியா, தனது பங்கை கடந்த நிதியாண்டில் (2022ல்) 4.4 சதவீதமாக இரட்டிப்பாக்கியுள்ளது என உலக வங்கி மற்றும் உலக வர்த்தக அமைப்பு (WTO) தனது சமீபத்திய ஆய்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.
- உலக வங்கி மற்றும் உலக வர்த்தக அமைப்பின்(WTO) சமீபத்திய அறிக்கையில் 'வளர்ச்சிக்கான சேவைகளில் வர்த்தகம்' என்ற தலைப்பில் இதை குறிப்பிட்டுள்ளது. மேலும் 2009 முதல் 2019 வரை சுமார் 3.5 மில்லியன் வெளிநாட்டு நோயாளிகளுக்கு மருத்துவ உதவிகளை அளித்துள்ளது என்றும் இந்த ஆய்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

## ஏற்றுமதி தயார்நிலை தரவரிசை பட்டியலில் தமிழகத்திற்கு முதலிடம் – நிதி ஆயோக் சமீபத்திய அறிக்கை.

- ஜூலை 2023 இல் வெளியிடப்பட்ட நிதி ஆயோக்கின் ஏற்றுமதிக்கான தயார் நிலை குறியீடு 2022ன் படி, கடலோர மாநிலங்கள் பிரிவில் மஹாராஷ்டிரா, குஜராத்தை பின்னுக்கு தள்ளி, தமிழ் நாடானது முதலிடத்தை பிடித்துள்ளது.
- இந்த குறியீடானது மாநிலங்களின் செயல் திறன் மற்றும் ஏற்றுமதி திறன் ஆகியவற்றின் அடிப்படையில் உருவாக்கப்பட்டு அவற்றின் தயார் நிலையை மதிப்பிடுவதாகும். இந்த நிதி ஆயோக்கின் அறிக்கையை அதன் தலைமை நிர்வாக அதிகாரி பி.வி.ஆர்.சுப்ரமணியம் வெளியிட்டார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். தமிழகத்தை(80.89) தொடர்ந்து இந்த மதிப்பீட்டில் மஹாராஷ்டிரா(78.20), கர்நாடகா(76.36), குஜராத், ஆந்திரா மற்றும் ஒடிசா ஆகிய மாநிலங்கள் உள்ளன.

## IEA நிறுவனமானது "ஆயில் 2023" என்ற நடுத்தரக் கால சந்தை விற்பனை அறிக்கையை வெளியிட்டுள்ளது.

- சர்வதேச எரிசக்தி நிறுவனமானது(IEA), பெட்ரோலியம் திட்டமிடல் மற்றும் பகுப்பாய்வு அமைப்புடன்(PPAC) இணைந்து MoP மற்றும் NG இன் கீழ் Oil 2023 என்ற தலைப்பிலான நடுத்தர கால சந்தை விற்பனை அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- "இந்தியாவின் எரிசக்தி தேவையானது மற்ற பெரியப் பொருளாதாரங்களை விட மிக வேகமாக வளர்ந்து வருகிறது" மற்றும் அதே போக்கு தொடரும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. தொழில்மயமாக்கல் மற்றும் நகரமயமாக்கலின் ஆதரவுடன் சாதகமான மக்கள்தொகையின் காரணமாக அனைத்து துறைகளிலும் வளர்ச்சி வரும் என IEA நிறுவன செயலாளர் ஸ்ரீ பங்கஜ் ஜெயின் குறிப்பிட்டுள்ளார்.

## சிங்கப்பூரின் கடவுச்சீட்டானது உலகின் மிக சக்தி வாய்ந்த கடவு சீட்டாக உருவெடுத்துள்ளது.

- நீண்ட ஆண்டுகளாக இந்த அந்தஸ்தை வைத்திருந்த ஜப்பான் ஆனது இந்த ஆண்டு மூன்றாவது இடத்திற்குத் தள்ளப்பட்டு மிகவும் சக்தி வாய்ந்த கடவு சீட்டாக சிங்கப்பூரின் கடவு சீட்டு உருவெடுத்துள்ளது.
- அதாவது சிங்கப்பூரின் உள்ள அனைத்து குடிமக்களும் உலகெங்கிலும் உள்ள 227 இல் 193 இடங்களுக்கு விசா இல்லாமல் செல்ல முடியும் என்பது இதன் சிறப்பாகும். லண்டனை தளமாகக் கொண்ட உலகளாவிய குடியுரிமை மற்றும் குடியிருப்பு ஆலோசனை நிறுவனமான ஹென்லி & பார்ட்னர்ஸ் ஆனது இந்த குறியீட்டை ஆண்டுதோறும் உருவாக்குகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## 2027ஆம் ஆண்டில் உலகின் 3வது மிகப்பெரிய பொருளாதாரமாக இந்தியா மாறும் – SBI யின் சமீபத்திய ஆய்வறிக்கை.

- தற்போதைய வளர்ச்சி விகிதத்தை கணக்கில் எடுத்து கொண்டால் 2027 ஆம் நிதியாண்டில்(2027-28) உலகின் 3வது மிகப்பெரிய பொருளாதாரமாக இந்தியா மாறும் எனவும் இந்த செயல்பாடுகளில், ஜப்பான் மற்றும் ஜெர்மனி ஆகிய இரண்டு பொருளாதாரங்களையும் விட இந்திய பொருளாதாரமானது மிஞ்சும் எனவும் SBI-யின் 'Ecowrap' என்ற தனது சமீபத்திய ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- இதற்கு முன்னதாக 2029 ஆம் ஆண்டில் இந்தியப் பொருளாதாரமானது உலகின் மூன்றாவது பெரிய பொருளாதாரமாக மாறும் என்று SBI தனது ஆய்வறிக்கைகளில் குறிப்பிட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் இந்தியப் பொருளாரமானது 3வது இடத்தை அடையும் போதே மகாராஷ்டிரா மற்றும் உத்தரபிரதேச மாநிலங்களானது பொருளாதாரத்தின்

அடிப்படையில் 500 பில்லியன் டாலர் மதிப்பை தாண்டிருக்கும் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### 2024 ஆம் நிதியாண்டில் இந்தியாவின் GDP ஆனது 6 – 6.3% வளரும் – டெலாய்ட் இந்தியா அறிக்கை.

- மார்ச் 31, 2024 ஆம் நிதியாண்டு முடிவடைவதற்குள் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது 6 முதல் 6.3 சதவீதம் வரை வளர்ச்சியடையும் என்று டெலாய்ட் இந்தியா நிறுவனமானது தனது ஜூலை மாதத்தின் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள்ளது.
- அடுத்த இரண்டு ஆண்டுகளில் இதே நடப்பு காரணி நிலை நிகழுமானால் அதன் பொருளாதார வளர்ச்சியானது 7 சதவீதத்தைத் தாண்டும் என்றும் அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

| தேதி | நாள் | குறிப்பு |
|---|---|---|
| ஜூலை 01 | தேசிய மருத்துவர்கள் தினம் 2023 | டாக்டர் பிதான் சந்திர ராயின் பிறந்த நாள் மற்றும் இறந்த நாளைக் போற்றுவதற்காக இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது.<br>Celebrating Resilience and Healing Hands என்பது இந்த ஆண்டிற்க்கான கருப்பொருளாகும். |
| ஜூலை 1 | தேசிய பட்டயக் கணக்காளர் தினம் 2023 | 1949 இல் இந்தியாவின் பாராளுமன்றத்தில், அரசியலமைப்பின் மூலம் இந்திய பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம் (ICAI) நிறுவப்பட்டதை நினைவுகூரும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 1 அன்று தேசிய பட்டய கணக்காளர் தினமானது கொண்டாடப்படுகிறது.<br>'Empowering Financial Excellence' என்பது இந்த ஆண்டிற்க்கான கருப்பொருளாகும். |
| ஜூலை 3 | சர்வதேச நெகிழி பைகள் இல்லாத தினம் 2023 | ஒருமுறை மட்டுமே பயன்படுத்தும் நெகிழி பைகளால் சுற்றுச்சூழலில் ஏற்படும் தீங்கினை பற்றிய விழிப்புணர்வை உலக மக்களுக்கு கொண்டும் செல்வதற்காக ஒவ்வொரு ஆண்டும் அன்று சர்வதேச நெகிழி பைகள் இல்லாத தினமானது கொண்டாடப்படுகிறது.<br>இந்த தினத்திற்கென்று குறிப்பிட்ட எந்த ஒரு கருப்பொருளும் இல்லை. |
| ஜூலை 6 | உலக ஜூனோசிஸ் தினம் 2023 | வெறிநாய் கடித்ததால் ஏற்பட்ட ஜூனோடிக் நோயினால் பாதிக்கப்பட்ட ஜோசப் மெய்ஸ்டர் என்ற சிறுவனுக்கு (ரேபிஸ்) முதல் தடுப்பூசி போட்ட பிரெஞ்சு விஞ்ஞானியான லூயிஸ் பாஸ்டர் அவர்களின் வெற்றியைக் போற்றும் மற்றும் கௌரவிக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 6-ஆம் தேதி உலக ஜூனோசிஸ் தினமானது அனுசரிக்கப்படுகிறது. ஜூனோடிக் நோய்கள் என்பது பூச்சிகள் அல்லது குறிப்பாக விலங்குகள் மூலம் மனிதர்களுக்கு பரவக்கூடிய நோய்கள் ஆகும்.<br>"ஒரே உலகம், ஒரே ஆரோக்கியம்: ஜூனோஸைத் தடு, பரவுவதை நிறுத்து("One World, One Health: Prevent Zoonoses, Stop the Spread") என்பது இந்த ஆண்டிற்கான கருப்பொருளாகும். |
| ஜூலை 11 | உலக மக்கள் தொகை தினம் 2023 | ஒவ்வொரு ஆண்டும் பூமியில் மக்கள்தொகை பெருக்கத்தினால் ஏற்படும் பிரச்சினைகளை உலக மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவும் அதை எவ்வாறு கையாளுவது பற்றிய சிந்தனைகளை வழங்குவதற்கும் ஒவ்வொரு ஆண்டும் உலக மக்கள்தொகை தினமானது அன்று கடைபிடிக்கப்படுகிறது.<br>பாலின சமத்துவத்தின் சக்தியை கட்டவிழ்த்துவிடுதல்: நமது உலகின் எல்லையற்ற சாத்தியக்கூறுகளைத் திறக்க பெண்கள் மற்றும் சிறுமிகளின் குரல்களை மேம்படுத்துதல்(Unleashing the power of gender equality: Uplifting the voices of women and girls to unlock our world's infinite possibilities) என்பது இந்த ஆண்டிற்கான கருப்பொருளாகும். |
| ஜூலை 12 | உலக காகிதப் பைகள் தினம் 2023 | நெகிழியால் ஏற்படும் மாசுபாடு மற்றும் விளைவு குறித்த விழிப்புணர்வை உலக மக்களுக்கு ஏற்படுத்தவும், சுற்றுச்சூழலுக்கு உகந்த மாற்றுப் பொருட்களைப் பயன்படுத்துவதை ஊக்குவிக்கவும் ஒவ்வொரு ஆண்டும் ஆம் தேதியானது உலக காகிதப் பைகள் தினமாக கடைப்பிடிக்கப்படுகிறது. |
| ஜூலை 14 | தேசிய பிரான்ஸ் தினம் | 1789 ஆம் ஆண்டு ஜூலை 14 ஆம் தேதி பாஸ்டில் கோட்டையின் வீழ்ச்சியை நினைவுகூரும் விதமாகவும் பிரான்சின் சுதந்திரமானது அங்கீகரிக்கப்பட்டதை நினைவு கூறும் விதமாகவும் ஒவ்வொரு ஆண்டும் அன்று தேசிய பிரான்ஸ் தினமானது கொண்டாடப்படுகிறது.<br>இது பாஸ்டில் தினம் என்றும் அழைக்கப்படுகிறது. மேலும் ஜூலை 13-14 ஆம் தேதிகளில் பிரான்ஸின் தலைநகராமான பாரிஸில் நடக்க இருக்கும் இந்த பாஸ்டில் தினத்தில் கௌரவ விருந்தினராக இந்திய பிரதமர் மோடி கலந்து கொள்வார் என மத்திய அரசாங்கம் அறிவித்துள்ளது. |

| | | |
|---|---|---|
| ஜூலை 15 | உலக இளைஞர் திறன்கள் தினம் 2023 | ஒழுக்கமான மற்றும் பொருத்தமான வேலை, தொழில்முனைவு ஆகியவற்றிற்கான திறன்களைக் கொண்ட மூலோபாய முக்கியத்துவத்தைக் உலக இளைஞர்க்கு கொண்டு செல்வதை நோக்கமாக கொண்டு ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையானது ஜூலை 15 ஆம் தேதியை "உலக இளைஞர் திறன்கள் தினமாக" (WYSD) அறிவித்துள்ளது.<br><br>ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையானது 2014 ஆம் ஆண்டில் இந்த அறிவிப்பை மேற்கொண்டுள்ளது. "திறமையான ஆசிரியர்கள், பயிற்சியாளர்கள் மற்றும் இளைஞர்களை மாற்றும் எதிர்காலத்திற்காக" என்பது இந்த ஆண்டிற்கான கருப்பொருளாகும். |
| ஜூலை 15 | கல்வி வளர்ச்சி நாள் | தமிழ்நாட்டின் முன்னாள் புகழ்பெற்ற முதலமைச்சர் கே.காமராஜ் அவர்களின் 121-வது பிறந்த தினம் 2023 ஆம் ஆண்டு ஜூலை 15 ஆம் தேதி கொண்டாடப்படுகிறது.<br>நாளான ஜூலை 15 ம் தேதியை ‘கல்வி நாள்‘ அல்லது ‘கல்வி வளர்ச்சி நாளாகக்‘ கொண்டாடுகிறது. மேலும் இந்த தினமானது 2006 முதல் கல்வி வளர்ச்சி நாளாக அனுசரிக்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும். |
| ஜூலை 17 | உலக சர்வதேச நீதி தினம் 2023 | பல குற்றங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்குவதில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் மற்றும் பிற அமைப்புகளின் குறிப்பிடத்தக்க சிறப்பான பங்கை போற்றுதல் மற்றும் மதிக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 17 ஆம் நாளானது உலக சர்வதேச நீதி தினமானது கடைபிடிக்கப்படுகிறது.<br>"Overcoming Barriers and Unleashing Opportunities for Social Justice" என்பது இந்த ஆண்டிற்கான கருப்பொருளாகும். |
| ஜூலை 18 | சர்வதேச நெல்சன் மண்டேலா தினம் | நெல்சன் மண்டேலாவின் வாழ்க்கை மற்றும் அவரின் பொது சமூக நல ஈடுபாடு ஆகியவற்றை போற்றும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 18 அன்று சர்வதேச நெல்சன் மண்டேலா தினமானது கடைப்பிடிக்கப்படுகிறது.<br>மண்டேலாவின் மதிப்புகள் மற்றும் கொள்கைகளைப் பற்றி சிந்திக்கவும், அவரின் சமூக கருத்துகளை பொது மக்களுக்கு கொண்டு செல்வதற்கும், தங்கள் சொந்த சமூகங்களில் நேர்மறையான நல்ல தாக்கத்தை ஏற்படுத்தவும் இந்த நாளானது உகந்தது என ஐ நா சபை தெரிவித்துள்ளது. "The Legacy Lives on Through You: Climate, Food, and Solidarity" என்பது இந்த ஆண்டிற்கான கருப்பொருளாகும். |
| ஜூலை 20 | சர்வதேச சதுரங்க தினம் 2023 | 1924 இல் பாரிஸில் சர்வதேச சதுரங்க கூட்டமைப்பு (FIDE) நிறுவப்பட்டதை குறிக்கும் வகையில் ஜூலை 20 ஆனது ஒவ்வொரு ஆண்டும் சர்வதேச சதுரங்க தினமாக கடைப்பிடிக்கப்படுகிறது.<br>இந்த தினத்திற்கென்று எந்த ஒரு கருப்பொருளும் இல்லை. மேலும் சதுரங்கத்தின் விரிவான பலன்களை ஒவ்வொரு நபருக்கும் புரிய வைப்பதே இதன் குறிக்கோள் என சர்வதேச சதுரங்க கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. |
| ஜூலை 20 | சர்வதேச நிலவு தினம் | மனிதர்கள் முதன் முதலில் நிலவில் தரை இறங்கிய நிகழ்வை நினைவுகூரும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 20 ஆம் நாளானது சர்வதேச நிலவு தினம் (IMD) ஆக கொண்டாடப்படுகிறது.<br>நிலவில் மனிதர்கள் தரை இறங்கியது இன்று வரை மனிதகுல வரலாற்றில் மிகப்பெரிய சாதனைகளில் ஒன்றாக பெருமிதம் கொள்ளப்படுகிறது. அமெரிக்க விண்வெளி வீரர்களான எட்வின் "பஸ்" ஆல்ட்ரின் மற்றும் நீல் ஆம்ஸ்ட்ராங் ஆகியோர் ஜூலை 1969 இல் நடந்த அப்பல்லோ 11 பயணத்தின் போது நிலவில் கால் பதித்த முதல் மனிதர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். |

| | | |
|---|---|---|
| ஜூலை 22 | தேசிய மாம்பழ தினம் 2023 | மாம்பழங்களின் சுவையை மட்டுமல்லாமல், குறிப்பாக இந்திய வரலாறு மற்றும் அவற்றின் மரபுகளில் ஒரு ஆழமான கலாச்சார முக்கியத்துவத்தையும் அவற்றின் உன்னதத்தையும் போற்றுவதற்காக ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 22 ஆம் நாளானது தேசிய மாம்பழ தினமாக கொண்டாடப்படுகிறது.<br><br>இந்த விழாவானது இந்தியா முழுவதும் உள்ள மாம்பழ ஆர்வலர்களால் 1987 ஆம் ஆண்டு இந்திய "தேசிய தோட்டக்கலை வாரியம்" ஆனது அறிவித்ததிலிருந்து கொண்டாடப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்த தினத்திற்கென்று எந்த ஒரு கருப்பொருளும் இல்லை. இந்தியாவின் தேசிய பழம் மாம்பழம் என்பது குறிப்பிடத்தக்கதாகும். |
| ஜூலை 22 | பை தோராய நாள் 2023 | இந்த குறியீடானது பிரிட்டிஷ் கணிதவியலாளர் வில்லியம் ஜோன்ஸால் 1706 இல் வடிவமைக்கப்பட்டதாகும். இந்த அறிவியல் கண்டுபிடிப்பை போற்றும் வகையில் பை தோராய நாளானது ஜூலை 22-ல் (பின்னத்தில் 22/7) கடைப்பிடிக்கப்படுகிறது.<br><br>மேலும் மார்ச் 14 (பை  இன் தசம வடிவ மதிப்பானது 3.14) ஆம் நாளானது உலகம் முழுவதும் பை தினமாக அனுசரிக்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும். |
| ஜூலை 26 | கார்கில் விஜய் திவாஸ் 2023 | 1999 ஆம் ஆண்டு கார்கில் போரில் நம் நாட்டிற்காக போரிட்டு தியாகம் செய்த இந்திய ராணுவ வீரர்களின் வீரம் மற்றும் தைரியத்தை போற்றும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 26 ஆம் நாளானது நாடு முழுவதும் "கார்கில் விஜய் திவாஸ்" கொண்டாடப்படுகிறது. அதாவது கார்கில் வெற்றி தினம் என தமிழில் குறிப்பிடப்படுகிறது.<br><br>பாகிஸ்தான் ராணுவமானது அத்துமீறி இந்திய எல்லையான காஸ்மீரின் கார்கில் பகுதியில் ஆக்கிரமிப்பு செய்ததை எதிர்த்து இந்திய ராணுவமானது "ஆபரேஷன் விஜய்" திட்டத்தை கையில் எடுத்து வெற்றி கண்டது. இந்த திட்டத்தின் இந்திய வெற்றியானது உலகளவில் மிக முக்கியமான வெற்றியாக பார்க்கப்படுகிறது. |
| ஜூலை 28 | உலக இயற்கை பாதுகாப்பு தினம் 2023 | இயற்கைச் சூழலின் வளம், அவற்றின் முக்கியத்துவம் மற்றும் அவற்றை பாதுகாத்தல் பற்றிய விழிப்புணர்வை உலகத்தில் உள்ள பொது மக்களிடையே ஏற்படுத்துவதை நோக்கமாக கொண்டு ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 28 ஆம் நாளானது உலக இயற்கை பாதுகாப்பு தினமானது கடைப்பிடிக்கப்படுகிறது.<br><br>"காடுகள் மற்றும் வாழ்வாதாரங்கள்: மக்கள் மற்றும் கிரகத்தை நிலைநிறுத்துதல்" (Forests and Livelihoods: Sustaining People and Planet) என்பது இந்த ஆண்டிற்கான கருப்பொருளாகும். |
| ஜூலை 29 | சர்வதேச புலிகள் தினம் 2023 | இந்தியாவில் வன புலிகளின் எண்ணிக்கையானது கடுமையான சரிவைக் கண்டதை கவனத்தில் எடுத்துக்கொண்டு, இந்த நிகழ்வைக் கொண்டாடுவதன் மூலம், வனப்புலிகள் பாதுகாப்பின் முக்கியமான முயற்சிகள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றிய விழிப்புணர்வை அனைத்து பொது மக்களுக்கும் கொண்டு செல்வதை நோக்கமாக கொண்டு ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 29 ஆம் நாளானது சர்வதேச புலிகள் தினமாக கொண்டாடப்படுகிறது.<br><br>2010 ஆம் ஆண்டில் நடைபெற்ற செயின்ட் பீட்டர்ஸ்பர்க் புலிகள் உச்சி மாநாட்டின் போது இந்த தினமானது ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடும் முடிவானது எடுக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| ஜூலை 30 | ஆள் கடத்தலுக்கு எதிரான உலக தினம் 2023 | இந்த தினத்திற்கென்று குறிப்பிட்ட கருப்பொருள் ஏதும் இல்லாமல் புலிகள் அழிவு மற்றும் அவற்றைக் காப்பாற்ற வேண்டியதன் அவசியத்தின் விழிப்புணர்வை பகிர்வதற்கான பொதுவான குறிக்கோளுடன் கொண்டாடப்படுகிறது.<br><br>நவீன கால அடிமைத்தனம் மற்றும் ஆட்கடத்தல் ஆகியவற்றை கடுமையாக எதிர்பதற்கும் அப்படியான நிகழ்வுகள் எதிர்காலத்தில் நிகழாமல் இருக்க கூடிய முன்முயற்சிகள் ஆகியவற்றை பற்றியான விழிப்புணர்வை உலக மக்களுக்கு ஏற்படுத்தும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 30 ஆம் நாளானது ஆட்கடத்தலுக்கு எதிரான உலக தினமாக கடைபிடிக்கப்படுகிறது<br><br>Reach every victim of trafficking, leave no one behind" என்பது இந்த ஆண்டிற்கான கருப்பொருளாகும் |

# நியமனம்

## முன்னாள் பார்தி ஏர்டெல் MD மற்றும் CEO மனோஜ் கோஹ்லி மூத்த ஆலோசகராக நியமனம்.



- டெலாய்ட் நிறுவனமானது தொழில்துறையில் மூத்த மற்றும் முன்னாள் தலைமை செயல் அதிகாரியான மனோஜ் கோஹ்லியை அந்நிறுவனத்தின் மூத்த ஆலோசகராக நியமித்துள்ளதாக அறிவித்துள்ளது.
- இந்த நியமனத்தின் மூலம் டெலாய்ட்டின் மூத்த ஆலோசகராக, கோஹ்லி தனது புதிய முன்னெடுப்பின் மூலம் விரிவான வணிகம் மற்றும் தொழில் அறிவைப் பயன்படுத்தி, உலகளவில் மற்றும் தெற்காசியாவில் நிறுவனத்தின் இருப்பை வலுப்படுத்த உதவுவார் என்று டெலாய்ட்டின் அறிக்கை கூறுகிறது.

## பாகிஸ்தான் உச்ச நீதிமன்றத்தின் இரண்டாவது பெண் நீதிபதி என்ற அந்தஸ்தை நீதிபதி முசரத் ஹிலாலி பெற்றுள்ளார்.

- நீதிபதி முசரத் ஹிலாலி பதவிப் பிரமாணம் செய்து, பாகிஸ்தான் உச்ச நீதிமன்றத்தில் பெண் நீதிபதியாக பதவியேற்றதால், அந்நாட்டின் உச்ச நீதிமன்றத்தில் நீதிபதியாக பதவியேற்ற இரண்டாவது பெண் என்ற அந்தஸ்தை பெற்றுள்ளார்.
- பாகிஸ்தானின் உச்ச நீதிமன்றத்தில் இரு பெண் நீதிபதிகள் இருப்பது வரலாற்றில் இதுவே முதல்முறை மற்றும் இதற்குமுன் இவர் பெஷாவர் உயர் நீதிமன்றத்தின் (PHC) தலைமை நீதிபதியாகப் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## தான்சானியாவில் சுவாமி விவேகானந்தரின் மார்பளவு சிலையை மத்திய அமைச்சர் திறந்து வைத்தார்

- தான்சானியாவில் உள்ள டார் எஸ் சலாம் பகுதியில் அமைந்துள்ள இந்தியாவின் கலாச்சார மையத்தில் இந்திய மறுமலர்ச்சியின் சிற்பியான சுவாமி விவேகானந்தரின் மார்பளவு சிலையை மத்திய வெளியுறவு அமைச்சர் (EAM) டாக்டர் எஸ் ஜெய்சங் திறந்து வைத்தார்.

## ஐஐடியின் முதல் பெண் இயக்குநராக ப்ரீத்தி அகல்யாம் நியமிக்கப்பட்டுள்ளார்.



- இவர் தான்சானியாவில் உள்ள சான்சிபாரில் அமைய உள்ள ஐஐடி மெட்ராஸின் விரிவாக்க அத்தியாயத்தின் பொறுப்பாளராக இருப்பார் என மத்திய அரசாங்கம் அறிவித்துள்ளது.
- இந்த நியமனத்தின் மூலம் டாக்டர் ப்ரீத்தி அகலாயம், இந்திய தொழில்நுட்பக் கழக வளாகத்தை(IIT's) வழிநடத்தும் முதல் பெண் இயக்குநர் என்ற அந்தஸ்தை பெறுகிறார். இந்த நியமனத்தின் மூலம் தனது கையாளுகையின் மூலம் சிறப்பாக வழிநடத்துவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நீதிபதி அலெக்சாண்டர் தாமஸ் கேரள உயர்நீதிமன்றத்தின் தற்காலிக தலைமை நீதிபதியாக பொறுப்பேற்பு.



- கேரள உயர்நீதிமன்றத்தின் தற்காலிக தலைமை நீதிபதியாக, நீதிபதி அலெக்சாண்டர் பொறுப்பேற்றுள்ளார்.
- கேரள உயர் நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி எஸ்.வி.பட்டி உச்ச நீதிமன்ற நீதிபதியாக பதவி உயர்வு பெறப்பட்டதை தொடர்ந்து, இவர் இந்த பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

## உலக வர்த்தக அமைப்பின் 13வது அமைச்சர்கள் மாநாட்டின் தலைவராக டாக்டர் தானி அல் சியோதி தேர்வு செய்யப்பட்டுள்ளார்.



- உலக வர்த்தக அமைப்பின் 13வது அமைச்சர்கள் மாநாட்டின் தலைவராக ஐக்கிய அரபு அமீரகத்தின் வெளியுறவு வர்த்தக அமைச்சர் டாக்டர் தானி அல் ஜேயோடி ஜூலை 2023 இல் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- 13வது அமைச்சர்கள் மாநாடானது பிப்ரவரி 2024 இல் UAE-ன் அபுதாபியில் நடைபெறவுள்ளது. இது வர்த்தக அமைப்பின் செயல்திறனை மதிப்பாய்வு செய்து, எதிர்காலத்திற்கான சில முக்கிய முன்னெடுப்புகளை எடுப்பதை நோக்கமாக கொண்டு இந்த மாநாடானது நடைபெற உள்ளது என 24 ஜூலை 2023 அன்று வெளியிடப்பட்ட அதிகாரப்பூர்வ அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## முக்கிய நபர்கள்

### இரட்டைமலை சீனிவாசன் பிறந்த தினம்



- சீனிவாசன் செங்கல்பட்டு மாவட்டத்தின் மதுராந்தகத்திற்கு அருகில் உள்ள கோழியாளம் என்ற சிற்றூரில் ஜூலை 7, 1859 அன்று இரட்டைமலை என்பவருக்கு மகனாய் பிறந்தார்.
- இவர் முக்கியமாக ஆதிதிராவிட தமிழர் மக்களுக்காகக் குரல் கொடுத்தவர் மற்றும் பஞ்சமர் மகாசன சபையைத் தோற்றுவித்து அவர்களின் வாழ்க்கையை முன்னேற்றுவதற்கு பாடுபட்டவர் என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். 1930—32களில் இலண்டனில் நடைபெற்ற அனைத்து வட்டமேசை மாநாடுகளிலும் இவர், அம்பேத்கருடன் ஆதிதிராவிட மக்களின் பிரதிநிதியாகச் சென்று கலந்துகொண்டு சிறப்பாகப் பணியாற்றியுள்ளார்.

## புத்தகங்கள்

"As the wheel turns"




- இந்தியாவின் முன்னாள் துணைக் குடியரசுத் தலைவரான வெங்கையா நாயுடு, "As the wheel turns" என்று பெயரிடப்பட்டப் புத்தகத்தை வெளியிட்டார்
- புத்தக வெளியிட்டு நிகழ்ச்சியில் பேசிய நாயுடு, "இந்தியாவின் சிறந்த மனிதர்களின் தனித்துவத்தை பற்றி இளம் தலைமுறையினர் அறிந்துகொள்ள இந்த புத்தகம் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்" என குறிப்பிட்டுள்ளார்.

### மெமரிஸ் நெவர் டை

- மறைந்த முன்னாள் இந்திய குடியரசுத் தலைவர் டாக்டர் APJ அப்துல் கலாம் ஐயா அவர்களின் வாழ்க்கை மற்றும் சாதனைக்கு அஞ்சலி செலுத்தும் வகையில், தமிழ்நாடு மாநிலத்தின் ராமநாதபுரம் மாவட்டத்தில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா 'மெமரிஸ் நெவர் டை' என்ற புத்தகத்தை ஜூலை 29 அன்று வெளியிட்டுள்ளார்.
- இந்த நூலானது விஞ்ஞானி டாக்டர் ஒய். எஸ்.ராஜன் மற்றும் டாக்டர் ஏபிஜேஎம் நசிமா மரைக்காயர் ஆகியோரால் இணைந்து எழுத்தப்பட்டுள்ளது.

## ஒடிசாவில் 50 கீழ் நீதிமன்றங்கள் 'காகிதமற்றது' என்ற அந்தஸ்தைப் பெற்றுள்ளது.

- ஒடிசாவில் குறைந்தபட்சம் கிட்டத்தட்ட 50 நீதிமன்றங்கள் ஜூலை 3, 2023 அன்று 'காகிதமற்றதாக' அல்லது டிஜிட்டலுடையதாக மாறியுள்ளது.
- இதன்மூலம் இதுவரை மாநிலத்தில் உள்ள மொத்த காகிதமில்லா நீதிமன்றங்களின் எண்ணிக்கை 84 ஐக் கடந்துள்ளது. மேலும் செப்டம்பர் 2022 லிருந்து 'மாநிலத்தில் காகிதமில்லா நீதிமன்றங்கள்" என்ற கருத்து அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## காசிப்பேட் பகுதியில் புதிய ரயில்வே உற்பத்தி பிரிவுக்கு பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார்

- பிரதமர் மோடி தெலுங்கானா மாநிலத்தில் உள்ள காசிப்பேட் பகுதியில் சுமார் கிட்டத்தட்ட 501 கோடி ரூபாய் மதிப்பிலான ரயில்வேதுறைக்கான புதிய உற்பத்தி யூனிட்டுக்கு அடிக்கல் நாட்டுகிறார். மேலும் பிரதமர் தனது நான்கு மாநில பயணத்தின் ஒரு பகுதியாக வாரங்கலில் பல கோடி மதிப்பிலான "பல உள்கட்டமைப்பு திட்டங்களுக்கு" அடிக்கல் நாட்டினார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.
- உள்ளூர் தொழில் மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்குதல் மற்றும் இப்பகுதியில் சமூகப்-பொருளாதார மேம்பாட்டிற்கான சாத்தியக்கூறுகளை அதிகரித்தல் மற்றும் சுமார் 1200 நேரடி வேலை வாய்ப்புகளை உருவாக்குதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு இந்தப் புதிய மையமானது திறக்கப்பட்டுள்ளது என பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

## நகர்ப்புற 20 (U20) மேயர் உச்சி மாநாடானது காந்திநகரில் தொடங்கப்பட்டுள்ளது.

- நகர்ப்புற 20 (Urban 20) மேயர் உச்சி மாநாடானது, குஜராத் மாநில முதலமைச்சர் ஸ்ரீ பூபேந்திரபாய் படேல் மற்றும் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்களுக்கான மாநில அமைச்சர் ஸ்ரீ கவுசல் கிஷோர் ஆகியோரால் அம்மாநில தலைநகரமான காந்தி நகரில் தொடங்கப்பட்டது.
- நகரமயமாக்கல் மற்றும் காலநிலையின் வளர்ந்து வரும் எதிர்ப்பு சவால்களைச் சமாளிக்க மற்றும் நிலையான — காலநிலை நகரங்களை உருவாக்குவதை நோக்கமாக கொண்டு இந்த மாநாடானது நடத்தப்பட்டது.

## Ballon d'Or விருதை வென்ற ஒரே ஸ்பெயின் வீரர் காலமானார்.



- "கோல்டன் காலிசியன்" என்று அழைக்கப்பட்டவரும் கால்பந்தாட்டத்தின் மிகவும் மதிப்புமிக்க தனிநபர் விருதான Ballon d'Or ஐ வென்ற ஒரே ஸ்பானிய மனிதர் என்ற பெருமையை கொண்டவருமான லூயிஸ் சுரேஸ் மிராமோண்டஸ், தனது 88 வயதில் காலமானார்.
- மேலும் இவர் 1960 இல் உலக கால்பந்தாட்டத்தின் மிகவும் மதிப்புமிக்க தனிநபர் விருதான பலோன் டி'ஓரை வென்றுள்ளார் மற்றும் 1964, 1965 இல் ஐரோப்பியக் கோப்பை மற்றும் மூன்று இத்தாலிய லீக் பட்டங்கள் இவரின் அர்ப்பணிப்பால் பெற்றுத்தந்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## மும்பையில் 'உலகளாவிய கடல்சார் இந்திய உச்சி மாநாடு 2023' -ஐ மத்திய அமைச்சர் தொடங்கி வைத்தார்

- துறைமுகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து அமைச்சர் சர்பானந்தா சோனோவால் 2023 ஆம் ஆண்டுக்கான மதிப்புமிக்க "உலகளாவிய இந்திய கடல்சார் உச்சி மாநாட்டின்" மூன்றாவது பதிப்பை தொடங்கினார்
- இந்த மாநாடானது அக்டோபர் 17 முதல் 19 வரை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. அறிவு மற்றும் தொழில்நுட்பத்திற்கான ஒத்துழைப்புடன் புதிய முதலீட்டு வாய்ப்புகள், எளிதாகச் செய்யக்கூடிய-வணிகத்தை மேம்படுத்துதல் மற்றும் நாடுகளுக்கிடையிலான வர்த்தகத்தை மேம்படுத்துதல் ஆகியவற்றை நோக்கமாக் கொண்டு இந்த மாநாடானது நடைபெற உள்ளது.

## JJM டிஜிட்டல்

- புது தில்லி விஞ்ஞான் பவனில் நடைபெற்ற தேசிய மாநாட்டின் போது, "JJM டிஜிட்டல்" அமைப்பை நிறுவுவதற்காக குடிநீர் மற்றும் சுகாதாரத் துறையானது எக்கோ இந்தியா அமைப்புடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை(MoU) மேற்கொண்டுள்ளது. அதன்படி இந்த அமைப்பானது தற்போது அமைக்கப்பட்டுள்ளது.
- JJM டிஜிட்டல் அமைப்பின் இணையத்தளமானது

மத்திய ஜல் சக்தி அமைச்சர் ஸ்ரீ கஜேந்திர சிங் ஷெகாவத் முன்னிலையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த அமைப்பானது மத்திய அரசின் நோக்கங்களை அடைவதில் திறம்பட பங்களிக்க தேவையான அறிவு மற்றும் திறன்களை தேவைப்படுபவர்களுக்கு வழங்குவதை நோக்கமாக கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

## ஆயுஷ் சுகாதார சேவைகள் மற்றும் ஆராய்ச்சிக்கான புதிய மையமானது கோவாவில் திறக்கப்பட்டுள்ளது.

- மத்திய ஆயுஷ் அமைச்சகமானது கோவாவில் உள்ள ரிபந்தர் என்னும் பகுதியில் "சுகாதார மற்றும் ஆயுஷ் ஆராய்ச்சி சேவைகளுக்காக ஒரு புதிய மையத்தை ஜூலை 2023 இல் தொடங்கியுள்ளது.
- அம்மாநிலத்தில் உள்ள பொதுமக்களுக்கு உயர்தர சுகாதாரச் சேவைகளை மலிவு விலையில் வழங்குவதையும், பாரம்பரிய மருத்துவத்தில் ஆராய்ச்சியை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு இந்த மையமானது தொடங்கப்பட்டுள்ளது என ஆயுஷ் அமைச்சகம் தெரிவித்துள்ளது. மேலும் ஒரு நூலகம், அருங்காட்சியகம் மற்றும் கடல் சார்ந்த மருந்துகளை ஆய்வு செய்வதற்காக இந்த ஆய்வகமானது தொடங்கப்பட்டுள்ளது.

# 2023 ஜூலை மாத வினா விடைகள்

1) கிராண்ட் கிராஸ் ஆஃப் தி லீஜியன் ஆஃப் ஹானர் விருது எந்த நாட்டில் பிரதமர் மோடிக்கு வழங்கப்பட்டது?

a. ஃப்ரான்ஸ்

b. ஜெர்மனி

c. இத்தாலி

d. அமெரிக்கா

2) பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கான குறு சிறு சேமிப்புத் திட்டமான மகிளா சம்மான் சேமிப்புச் சான்றிதழ்(MSSC) திட்டம் பற்றிய பின்வரும் கூற்றுகளைக் கருத்தில் கொள்க

1) இத்திட்டமானது பெண்கள் மற்றும் குழந்தைகளின் எதிர்காலத்தை கருதி அவர்களுக்காக மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்களால் 2023-24 நிதியாண்டில் (மத்திய பட்ஜெட்டில்) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது

2) இத்திட்டம் நாட்டில் உள்ள அனைத்து வங்கிகளும் செயல்படுத்துகிறது

மேற்கண்ட கூற்றுகளில் எது/எவை சரியானவை/ சரியானது?

A. கூற்று 1 மட்டும் சரி

B. கூற்று 2 மட்டும் சரி

C. இரண்டு கூற்றுகளும் சரி

D. இரண்டு கூற்றுகளும் தவறு

3) ஆயுஷ் சுகாதார சேவைகள் மற்றும் ஆராய்ச்சிக்கானப் புதிய மையம் எங்கு தொடங்கப்பட்டது?

A. கோவா

B. கேரளா

C. தமிழ் நாடு

D. மத்திய பிரதேசம்

4) பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த நெருக்கடி கால அவசர நிலையானது எந்த நாட்டில் சமீபத்தில் நடைமுறைக்கு வந்தது?

A. பாகிஸ்தான்

B. நைஜீரியா

C. சோமாலியா

D. தென்னாப்பிரிக்கா

5) போர்க்கப்பல்களை தயாரிப்பதற்காக எந்த நாட்டுடன் இந்தியா ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது?

A. கனடா

B. ஃப்ரான்ஸ்

C. ஜெர்மனி

D. அமெரிக்கா

6) கலைஞர் நூற்றாண்டு நூலகம் எந்த மாவட்டத்தில் தொடங்கப்பட்டது?

A. சென்னை

B. திருவாரூர்

C. திருநெல்வேலி

D. மதுரை

7) 2023 நிதியாண்டில் மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதியில் எந்த மாநிலம் முன்னணியில் உள்ளது?

A) கேரளா

B) கர்நாடகா

C) ஆந்திர பிரதேசம்

D) தமிழ்நாடு

8) பின்வரும் இணைகளைக் கருத்தில் கொள்க

1) கீழடி- சிவகங்கை

2) அரிக்கமேடு - திருவண்ணாமலை

3) வெம்பக்கோட்டை- விருதுநகர்

மேற்கண்ட இணைகளில் எத்தனை இணைகள் சரியாக உள்ளன?

A) 1&3 மட்டும்

B) 1&2 மட்டும்

C) 2&3 மட்டும்

D) 1,2&3

9) 11 வது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு எங்கு நடைபெற்றது ?

A) மலேசியா

B) சென்னை

C) லண்டன்

D) திருவண்ணாமலை

10) கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் கீழ் குடும்ப தலைவிகளுக்கு வழங்கப்படும் ஊக்கத்தொகை?

A) ரூ. 1000

B) ரூ. 1500

C) ரூ. 2000

D) ரூ. 5000

11) மதராஸ் மாநிலம்,அதிகாரப்பூர்வமாக `தமிழ்நாடு' என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது?

A) ஜூலை 17

B) ஜூலை 18

C) ஜூலை 19

D) ஜூலை 20

12) தமிழ்நாடு தினம் என்று அனுசரிக்கப்படுகிறது?

A) ஜூலை 17

B) ஜூலை 18

C) ஜூலை 19

D) ஜூலை 20

13) பின்வரும் கூற்றுகளைக் கருத்தில் கொள்க

1) தேசிய அரிவாள் செல் இரத்த சோகை(Sickle Cell Anaemia) ஒழிப்புத் திட்டம் அரிவாள் உயிரணு(Sickle Cell) நோயால், குறிப்பாகப் பழங்குடியின மக்கள் மற்றும் மலையோர வசிப்பவர்களிடையே ஏற்படும் அழுத்தமான சுகாதாரச் சவால்களை நிவர்த்தி செய்வதே இந்த திட்டத்தின் நோக்கமாகும்.

2) மேலும் 2047 ஆம் ஆண்டுக்குள் இந்த நோயினை நாட்டின் பொது சுகாதாரப் பிரச்சனையிலிருந்து அகற்றுவதற்கான அரசாங்கத்தின் தொடர்ச்சியான முயற்சிகளில் இந்த திட்டம் ஒன்றாகப் பார்க்கப்படுகிறது.

மேற்கண்ட கூற்றுகளில் எது/ எவை சரியானது / சரியானவை?

A) கூற்று 1 மட்டும் சரி

B) கூற்று 2 மட்டும் சரி

C) இரண்டு கூற்றுகளும் சரி

D) இரண்டு கூற்றுகளும் தவறு

14) ஸ்டார்ட் அப் 20 ஷிகர் உச்சி மாநாடு எங்கு நடைபெற்றது?

A) புதுதில்லி

B) மும்பை

C) கொல்கத்தா

D) ஹரியானா

15) பின்வரும் நாடுகளில் எவை ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பில் உறுப்பினராக உள்ளன?

1) இந்தியா

2) பாகிஸ்தான்

3) சீனா

4) இங்கிலாந்து

5) அமெரிக்கா

சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்

A) 1,2&3 மட்டும் சரி

B) 2,3&5 மட்டும் சரி

C) 1,4&5 மட்டும்

D) 1,2,3,4&5

16) 2023 ஆம் ஆண்டிற்கான பாரம்பரிய மருந்துகள் குறித்த மாநாட்டை எந்த நாடு நடத்த உள்ளது?

A) இந்தியா

B) பிலிப்பைன்ஸ்

C) வியட்நாம்

D) கம்போடியா

17) டாங்காய் முறை என்பது எதனுடன் தொடர்புடையது?

A) பாரம்பரிய மருத்துவம்

B) கப்பல் கட்டுதல்

C) நதிநீர் இணைப்பு

D) மழைநீர் சேகரிப்பு

18) லோக்டாக் ஏரி எந்த மாநிலத்தில் அமைந்துள்ளது?

A) மிசோரம்

B) மேகாலயா

C) அஸ்ஸாம்

D) மணிப்பூர்

19) ஜி 20 இன் அதிகாரப்பூர்வ குழுவான “சிவில் 20” உச்சி மாநாடு எங்கு நடைபெற்றது?

A) மும்பை

B) சென்னை

C) புனே

D) ஜெய்ப்பூர்

20) பல்பொருள் அங்காடிகளில் பயன்படுத்தப்படும் மெல்லிய நெகிழிப் பைகளை முதன்முதலில் தடை செய்துள்ள நாடு?

A) ஆஸ்திரேலியா

B) இந்தியா

C) அமெரிக்கா

D) நியூசிலாந்து

21) உலகளாவிய நெருக்கடி பதில் குழுவின் (GCRG) சாம்பியன்ஸ் குழுவில் பின்வரும் எந்த நாடுகள் இடம்பெற்றுள்ளன?

1) வங்கதேசம்

2) இந்தியா

3) ஜெர்மனி

சரியான விடையை தேர்ந்தெடுக்கவும்

A) 1&2 மட்டும் சரி

B) 2&3 மட்டும் சரி

C) 1&3 மட்டும் சரி

D) 1,2 &3

22) உலகின் முதல் மீத்தேன் திரவ ராக்கெட்டை வெற்றிகரமாக ஏவிய நாடு எது?

A) இங்கிலாந்து

B) இந்தியா

C) சீனா

D) இரஷ்யா

23) 2023 ஆம் ஆண்டுக்கான பசுமை ஹைட்ரஜன் குறித்த சர்வதேச மாநாடானது(ICGH 2023) எங்கு நடைபெற்றது?

A) மும்பை

B) சென்னை

C) புது தில்லி

D) லக்னோ

24) e SARAS இன் பயன்பாடு

A) நியாய விலை அங்காடிகள் தொடர்பான செய்திகளை கண்காணிக்க

B) பெண்களால் தயாரிக்கப்பட்ட பொருட்களை சந்தைப்படுத்த மொபைல் செயலி

C) மின் ஆளுமை வளர்ச்சிக்கு ஊக்கம் அளித்தல்

D) பெண்களுக்கு ஆபத்து காலத்தில் உதவுவதற்காக உருவாக்கப்பட்ட செயலி

25) 2022 ஆம் ஆண்டின் ஏற்றுமதி தயார்நிலை தரவரிசை பட்டியலில் எந்த மாநிலம் முதலிடம் வகிக்கிறது?

A) கேரளா

B) ஆந்திர பிரதேசம்

C) மகாராஷ்டிரா

D) தமிழ் நாடு

26) ஏற்றுமதிக்கான தயார் நிலை குறியீடு எந்த அமைப்பு வெளியிடுகிறது?

A) மத்திய நிதித்துறை

B) நிதி ஆயோக்

C) மத்திய உள்துறை அமைச்சகம்

D) மத்திய ஏற்றுமதி இறக்குமதி அலுவலகம்

27) "ஆயில் 2023" என்ற நடுத்தர கால சந்தை விற்பனை அறிக்கை எந்த அமைப்பு வெளியிடுகிறது?

A) உலக வங்கி

B) சர்வதேச நாணய நிதியம்

C) உலக பொருளாதார மன்றம்

D) சர்வதேச எரிசக்தி நிறுவனம்

28) உலகின் மிக சக்தி வாய்ந்த கடவு சீட்டாக கருதப்படுவது எது?

A) அமெரிக்கா

B) இங்கிலாந்து

C) மொரிசியசு

D) சிங்கப்பூர்

29) குளோபல் இந்தியன் ஐகான் விருது யாருக்கு வழங்கப்பட்டது?

A) பி.வி. சிந்து

B) நரேந்திர மோடி

C) ராகுல் காந்தி

D) மேரி கோம்

30) கிராண்ட் கிராஸ் ஆஃப் தி லீஜியன் ஆஃப் ஹானர் என்ற விருதினைப் பெற்ற முதல் இந்திய பிரதமர் யார்?

A) ஜவஹர்லால் நேரு

B) இந்திரா காந்தி

C) மன்மோகன் சிங்

D) நரேந்திர மோடி

31) கிராண்ட் கிராஸ் ஆஃப் தி லீஜியன் ஆஃப் ஹானர் எந்த ஆண்டு நிறுவப்பட்டது?

A) 1801

B) 1802

C) 1803

D) 1804

32) புண்யபூஷன் விருது பெற்ற டாக்டர் மோகன் ஆகாஷேவுக்கு எந்த ஆண்டு சங்கீத நாடக அகாடமி விருது வழங்கப்பட்டது?

A) 1995

B) 1996

C) 1997

D) 1998

33) 'உத்யோக் ரத்னா' விருது யாருக்கு வழங்கப்பட்டது?

A) ரத்தன் டாடா

B) நரேந்திர மோடி

C) ஆனந்த் மகேந்திரா

D) மன்மோகன் சிங்

34) 'உத்யோக் ரத்னா' விருது எந்த மாநிலத்தில் வழங்கப்படுகிறது?

A) மகாராஷ்டிரா

B) மத்திய பிரதேசம்

C) தமிழ் நாடு

D) கேரளா

35) மெமரிஸ் நெவர் டை யாரைப் பற்றியது?

A) அடல் பிகாரி வாஜ்பாய்

B) அப்துல் கலாம்

C) நரேந்திர மோடி

D) ஜவஹர்லால் நேரு

36) வருணா கூட்டுப் கடற்பயிற்சி இந்தியா மற்றும் ___ இடையேயான கூட்டுப் பயிற்சி ஆகும்.

A) அமெரிக்கா

B) பிரான்ஸ்

C) இங்கிலாந்து

D) ஜப்பான்

37) JIMEX 23இந்தியா மற்றும் ___ இடையேயான கூட்டுப் பயிற்சி ஆகும்.

A) அமெரிக்கா

B) பிரான்ஸ்

C) இங்கிலாந்து

D) ஜப்பான்

38) 'Nomadic Elephant 2023' ஆனது இந்தியாவுக்கும் _____வுக்கும் இடையிலான கூட்டு ராணுவப் பயிற்சி ஆகும்

A) பிலிப்பைன்ஸ்

B) பிரான்ஸ்

C) இங்கிலாந்து

D) மங்கோலியா



SIVARAJAVEL IAS ACADEMY

39) ஆசிய கபடி சாம்பியன் பட்டத்தை வென்ற நாடு எது?

A) ஜப்பான்
B) தென் கொரியா
C) இந்தியா
D) பாகிஸ்தான்

40) ஆசிய கபடி சாம்பியன் விளையாட்டு எந்த நாட்டில் நடைபெற்றது?

A) ஜப்பான்
B) தென் கொரியா
C) இந்தியா
D) பாகிஸ்தான்

41) லாசன்னே டயமண்ட் லீக் பட்டம் வென்ற நாடு எது?

A) அமெரிக்கா
B) இந்தியா
C) பிரான்ஸ்
D) இங்கிலாந்து

42) லாசன்னே டயமண்ட் லீக் எந்த விளையாட்டுடன் தொடர்புடையது?

A) நீளம் தாண்டுதல்
B) ஈட்டி எறிதல்
C) பூப்பந்து
D) கூடைப்பந்து

43) ஆசிய கலப்பு இரட்டையர் ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப் போட்டியில் வென்ற நாடு?

A) இந்தியா
B) ஜப்பான்
C) தென் கொரியா
D) சீனா

44) ஆசிய கலப்பு இரட்டையர் ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப் போட்டி எந்த நாட்டில் நடைபெற்றது?

A) இந்தியா
B) ஜப்பான்
C) தென் கொரியா
D) சீனா

45) ஆர்யன் நெஹ்ரா எந்த விளையாட்டுடன் தொடர்புடையவர்?

A) நீச்சல்
B) பளு தூக்குதல்
C) தடகளம்
D) நீளம் தாண்டுதல்

46) அவ்னீத் கவுர் மற்றும் பிரயன்ஷ் எந்த விளையாட்டுடன் தொடர்புடையவர்கள்?

A) பளு தூக்குதல்
B) தடகளம்
C) நீளம் தாண்டுதல்
D) வில்வித்தை

47) லிமெரிக் எந்த நாட்டில் அமைந்துள்ளது?

A) நியூசிலாந்து
B) அயர்லாந்து
C) அமெரிக்கா
D) ஆஸ்திரேலியா

48) லக்ஷ்யா சென் எந்த விளையாட்டுடன் தொடர்புடையவர்?

A) பேட்மிண்டன்
B) கூடைப்பந்து
C) கால்பந்து
D) ஈட்டி எறிதல்

49) ருத்ரன்ஷ் கண்டேல்வால் எந்த விளையாட்டுடன் தொடர்புடையவர்

A) துப்பாக்கி சுடுதல்
B) கூடைப்பந்து
C) கால்பந்து
D) ஈட்டி எறிதல்

50) காமன்வெல்த் பளு தூக்குதல் சாம்பியன்ஷிப் போட்டி எங்கு நடைபெற்றது?

A) உத்தரப் பிரதேசம்
B) தமிழ் நாடு
C) மத்திய பிரதேசம்
D) மகாராஷ்டிரா

51) நிஷாத் குமார் எந்த விளையாட்டுடன் தொடர்புடையவர்?

A) தடகளம்

B) மட்டைப்பந்து

C) பூப்பந்து

D) கூடைப்பந்து

52) ஞானேஸ்வரி யாதவ் எந்த விளையாட்டுடன் தொடர்புடையவர்?

A) பளு தூக்குதல்

B) தடகளம்

C) நீச்சல்

D) கூடைப்பந்து

53) ஆசிய தடகள சாம்பியன்ஷிப் போட்டி எங்கு நடைபெற்றது?

A) கம்போடியா

B) வியட்நாம்

C) சீனா

D) தாய்லாந்து

54) அபிஷேக் பால் எந்த பிரிவில் பதக்கம் வென்றார்?

A) நீச்சல்

B) பளு தூக்குதல்

C) கிரிக்கெட்

D) ஓட்டப் பந்தயம்

55) ஜோதி யார்ராஜி எந்த விளையாட்டுடன் தொடர்புடையவர்?

A) தடை ஓட்டம்

B) நீச்சல்

C) பளு தூக்குதல்

D) கிரிக்கெட்

56) தஜிந்தர்பால் சிங் தூர் எந்த விளையாட்டுடன் தொடர்புடையவர்?

A) பளு தூக்குதல்

B) குண்டெறிதல்

C) கிரிக்கெட்

D) தடை ஓட்டம்

57) மேட் பாவிக் எந்த விளையாட்டுடன் தொடர்புடையவர்?

A) டென்னிஸ்

B) பேட்மிண்டன்

C) ஹாக்கி

D) கால்பந்து

58) விம்பிள்டன் பட்டம் வென்றவர் யார்?

A) லியுட்மிலா கிச்செனோக்

B) மேட் பாவிக்

C) நோவக் ஜோகோவிச்

D) அல்காரஸ்

59) சாங்வான் நகரம் எங்கு அமைந்துள்ளது?

A) ஜப்பான்

B) தென் கொரியா

C) வட கொரியா

D) இலங்கை

60) கமல்ஜீத் எந்த விளையாட்டுடன் தொடர்புடையவர்?

A) துப்பாக்கி சுடுதல்

B) பளு தூக்குதல்

C) கிரிக்கெட்

D) கால்பந்து

61) நீதிபதி அலெக்சாண்டர் தாமஸ் எந்த உயர்நீதிமன்றத்தின் தற்காலிக தலைமை நீதிபதியாக பொறுப்பேற்றார்?

A) தமிழ் நாடு

B) கேரளா

C) மேற்கு வங்காளம்

D) மேகாலயா

62) ஐஐடியின் முதல் பெண் இயக்குநராக யார் நியமிக்கப்பட்டுள்ளார்?

A) கீதாஞ்சலி கோபிநாத்

B) ப்ரீத்தி அகல்யாம்

C) ஸ்மிருதி இரானி

D) நிர்மலா சீதாராமன்

63) சுவாமி விவேகானந்தரின் மார்பளவு சிலை எந்த நாட்டில் நிறுவப்பட்டது?

A) தென்னாப்பிரிக்கா

B) இங்கிலாந்து

C) பிரான்ஸ்

D) தான்சானியா

64) எந்த நாட்டின் உச்ச நீதிமன்றத்தின் இரண்டாவது பெண் நீதிபதி என்ற அந்தஸ்தை நீதிபதி முசரத் ஹிலாலி பெற்றுள்ளார்?

A) ஆப்கானிஸ்தான்

B) ஈரான்

C) சிரியா

D) பாகிஸ்தான்

65) தானி அல் சியோதி எதன் தலைவராக நியமிக்கப்பட்டார்?

A) உலக வர்த்தக மையம் அமைச்சர்கள் குழு

B) உலக வங்கி

C) சர்வதேச நாணய நிதியம்

D) உலக பொருளாதார மன்றம்

66) world Development report எந்த நிறுவனத்தால் வெளியிடப்பட்டது?

A) உலக வங்கி

B) சர்வதேச நாணய நிதியம்

C) உலக பொருளாதார மன்றம்

D) உலக வர்த்தக மையம்

67) 'வளர்ச்சிக்கான சேவைகளில் வர்த்தகம்' என்ற அறிக்கையை வெளியிட்டது?

A) உலக வங்கி

B) சர்வதேச நாணய நிதியம்

C) உலக பொருளாதார மன்றம்

D) உலக வர்த்தக மையம்

68) பின்வரும் கூற்றுகளைக் கருத்தில் கொள்க

1) தசைநார் சிதைவு நோய் என்பது சிறுவர்களுக்கு ஏற்படக் கூடிய மிக அரிய வகை மரபணு பாதிப்பாகும்.

2) இதனால் தசைகளின் இயக்கம் முடங்கி முற்றிலும் நடமாட இயலாத நிலை ஏற்படும்.

மேற்கண்ட கூற்றுகளில் எது/ எவை சரியானவை/ சரியானது?

A) கூற்று 1 மட்டும் சரி

B) கூற்று 2 மட்டும் சரி

C) இரண்டு கூற்றுகளும் சரி

D) இரண்டு கூற்றுகளும் தவறு

69) 'டிஸ்ரோபின்' என்பது ஒரு

A) புரதம்

B) கொழுப்பு

C) நார் சத்து

D) விட்டமின்

70) ககன்யான் திட்டத்தின் நோக்கம்

A) நிலவுக்கு மனிதர்களை அனுப்புதல்

B) விண்வெளிகசு மனிதர்களை அனுப்புதல்

C) செவ்வாய் கிரகத்தில் தனிமங்களை ஆராய்தல்

D) நிலவின் மறுபுறம் தரை இறங்குதல்

71) கூம்பு வடிவ விளக்கு எந்த தொல்பொருள் இடத்தில் கண்டறியப்பட்டது?

A) வெம்பக்கோட்டை

B) கீழடி

C) அரிக்கமேடு

D) ஆதிச்சநல்லூர்

72) 2023 நிதியாண்டில் மின்னணு பொருட்கள் ஏற்றுமதியில் இரண்டாம் இடம் பெற்றுள்ள மாநிலம்?

A) கர்நாடகா

B) உத்திரபிரதேசம்

C) ஆந்திர பிரதேசம்

D) தெலுங்கானா

73) தமிழகத்தின் முதல் விமானப் பயிற்சி எங்கு அமைய உள்ளது?

A) கோயம்புத்தூர்

B) சேலம்

C) ஈரோடு

D) தஞ்சாவூர்

74) தமிழ்நாடு தினம் எந்த ஆண்டிலிருந்து அனுசரிக்கப்படுகிறது?

A) 2020

B) 2021

C) 2022

D) 2023

75) இந்தியாவுடனான புதுப்பிக்கப்பட்ட விமான ஆராய்ச்சி மற்றும் சேவைகள் ஒப்பந்தத்தை எந்த நாடு மேற்கொண்டது?

A) பிலிப்பைன்ஸ்

B) வங்கதேசம்

C) இலங்கை

D) தாய்லாந்து

76) இந்தியாவின் குறைந்த கார்பன் ஆற்றல் துறையை மேம்படுத்துவதற்காக 1.5 பில்லியன் டாலர் கடனுக்கு ______ஒப்புதல் அளித்துள்ளது.

A) சர்வதேச நாணய நிதியம்

B) உலக வர்த்தக மையம்

C) உலக வங்கி

D) உலக பொருளாதார மன்றம்

77) 3வது ஜி20 கலாச்சார பணிக்குழு கூட்டமானது எங்கு நடைபெற்றது?

A) குருகிராம்

B) கடாக்

C) டிஸ்பூர்

D) ஹம்பி

78) பூமி சம்மான் 2023 யாருக்கு வழங்கப்பட்டது?

A) சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு

B) சிறந்த பாடகர்களுக்கு

C) சிறந்த ஆட்சியர்களுக்கு

D) சுற்றுச்சூழல் ஆர்வலர்களுக்கு

79) வியூக சுத்தமான எரிசக்தி கூட்டாண்மைப்பு இந்தியா மற்றும் ___ இடையே நடைபெற்றது

A) அமெரிக்கா

B) இங்கிலாந்து

C) பிரான்ஸ்

D) நியூசிலாந்து

80) __50 கீழ் நீதிமன்றங்கள் ‘காகிதமற்றது’ என்ற அந்தஸ்தை பெற்றுள்ளது.

A) ஒடிசா

B) ஆந்திர பிரதேசம்

C) மேற்கு வங்காளம்

D) தமிழ் நாடு

81) காசிப்பேட் எந்த மாநிலத்தில் அமைந்துள்ளது?

A) கர்நாடகா

B) தெலுங்கானா

C) ஆந்திர பிரதேசம்

D) மகாராஷ்டிரா

82) நகர்ப்புற 20 (U20) மேயர் உச்சி மாநாடு எங்கு நடைபெற்றது?

A) அகமதாபாத்

B) காந்திநகர்

C) சென்னை

D) அலகாபாத்

83) ‘உலகளாவிய கடல்சார் இந்திய உச்சி மாநாடு 2023’ எங்கு நடைபெற்றது?

A) மும்பை

B) சென்னை

C) கொல்கத்தா

D) புனே

SIVARAJAVEL IAS ACADEMY

84) ஆயுஷ் சுகாதார சேவைகள் மற்றும் ஆராய்ச்சிக்கான புதிய மையம் எங்கு நிறுவப்பட்டது?

A) கேரளா

B) கர்நாடகா

C) மத்திய பிரதேசம்

D) கோவா

85) பஞ்சமர் மகாசன சபையைத் தோற்றுவித்தவர் யார்?

A) அயோத்தி தாசர்

B) இரட்டை மலை சீனிவாசன்

C) அம்பேத்கர்

D) ஜகசீவன் ராம்

86) 1930—32களில் இலண்டனில் நடைபெற்ற அனைத்து வட்டமேசை மாநாடுகளிலும் பங்கேற்ற தமிழர் யார்?

A) இரட்டை மலை சீனிவாசன்

B) அம்பேத்கர்

C) ஜவஹர்லால் நேரு

D) காந்தி அடிகள்

87) தேசிய மருத்துவர்கள் தினம் 2023 என்று அனுசரிக்கப்படுகிறது?

A) ஜூலை 1

B) ஜூலை 2

C) ஜூலை 3

D) ஜூலை 4

88) தேசிய பட்டய கணக்காளர் தினம் 2023 என்று அனுசரிக்கப்படுகிறது?

A) ஜூலை 1

B) ஜூலை 2

C) ஜூலை 3

D) ஜூலை 4

89) ரேபிஸ் நோய் எதனால் ஏற்படுகிறது?

A) வைரஸ்

B) பாக்டீரியா

C) பூஞ்சை

D) அமிபா

90) உலக மக்கள் தொகை தினம் 2023 என்று அனுசரிக்கப்படுகிறது?

A) ஜூலை 10

B) ஜூலை 11

C) ஜூலை 12

D) ஜூலை 13

91) உலக காகித பைகள் தினம் 2023 என்று அனுசரிக்கப்படுகிறது?

A) ஜூலை 10

B) ஜூலை 11

C) ஜூலை 12

D) ஜூலை 13

92) பாஸ்டில் கோட்டையின் வீழ்ச்சி எந்த ஆண்டு நடைபெற்றது?

A) 1788

B) 1789

C) 1790

D) 1791

93) உலக இளைஞர் திறன்கள் தினம் 2023 என்று அனுசரிக்கப்படுகிறது?

A) ஜூலை 11

B) ஜூலை 13

C) ஜூலை 12

D) ஜூலை 15

94) கல்வி வளர்ச்சி நாள் யாருடைய நினைவாக அனுசரிக்கப்படுகிறது?

A) காமராஜர்

B) இராதாகிருஷ்ணன்

C) மவுலானா அப்துல் கலாம் ஆசாத்

D) ஜவஹர்லால் நேரு

95) கல்வி வளர்ச்சி நாள் எங்கு அனுசரிக்கப்படுகிறது?

A) தமிழ் நாடு

B) கேரளா

C) கர்நாடகா

D) தெலுங்கானா

96) கல்வி வளர்ச்சி நாள் என்று அனுசரிக்கப்படுகிறது?

A) ஜூலை 13

B) ஜூலை 14

C) ஜூலை 15

D) ஜூலை 17

97) கல்வி வளர்ச்சி நாள் எந்த ஆண்டு முதல் கொண்டாடப்படுகிறது?

A) 2004

B) 2005

C) 2006

D) 2007

98) உலக சர்வதேச நீதி தினம் 2023 என்று அனுசரிக்கப்படுகிறது?

A) ஜூலை 14

B) ஜூலை 15

C) ஜூலை 16

D) ஜூலை 17

99)கார்கில் விஜய் திவாஸ் 2023 என்று அனுசரிக்கப்படுகிறது?

A) ஜூலை 24

B) ஜூலை 25

C) ஜூலை 26

D) ஜூலை 27

100) சர்வதேசப் புலிகள் தினம் 2023 என்று அனுசரிக்கப்படுகிறது?

A) ஜூலை 28

B) ஜூலை 24

C) ஜூலை 29

D) ஜூலை 22

## Answers:

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | A | 21 | D | 41 | B | 61 | A | 81 | B |
| 2 | A | 22 | C | 42 | B | 62 | B | 82 | B |
| 3 | A | 23 | C | 43 | A | 63 | D | 83 | B |
| 4 | B | 24 | B | 44 | D | 64 | D | 84 | D |
| 5 | B | 25 | D | 45 | A | 65 | A | 85 | B |
| 6 | D | 26 | B | 46 | D | 66 | A | 86 | A |
| 7 | D | 27 | D | 47 | B | 67 | D | 87 | A |
| 8 | B | 28 | D | 48 | A | 68 | C | 88 | A |
| 9 | B | 29 | D | 49 | A | 69 | A | 89 | A |
| 10 | A | 30 | D | 50 | A | 70 | B | 90 | B |
| 11 | B | 31 | B | 51 | A | 71 | A | 91 | C |
| 12 | B | 32 | B | 52 | A | 72 | B | 92 | B |
| 13 | C | 33 | A | 53 | D | 73 | B | 93 | D |
| 14 | D | 34 | A | 54 | D | 74 | B | 94 | A |
| 15 | A | 35 | B | 55 | A | 75 | A | 95 | A |
| 16 | A | 36 | B | 56 | B | 76 | C | 96 | C |
| 17 | B | 37 | D | 57 | A | 77 | D | 97 | C |
| 18 | D | 38 | D | 58 | D | 78 | C | 98 | D |
| 19 | D | 39 | C | 59 | B | 79 | A | 99 | C |
| 20 | D | 40 | B | 60 | A | 80 | A | 100 | C |